


தமிழ்Mirror
www.tamilmirror.lk



இனிய தைப்பொங்கல் வாழ்த்துகள்

திங்கட்கிழமை ஜனவரி 15, 2024 | ஒளி: 10 கதிர் 171 | பக்கம்:09 | நகரப்பதிப்பு | FREE | MONDAY, JANUARY 15, 2024

## தமிழரசுக் கட்சியின் பதவிகளை

# “பிரித்தால் நல்லது”

### முன்னாள் எம்.பி சிறிநேசன் விளக்கம்



வ.சக்தி

“தமிழரசுக் கட்சியின் தலைவர் பதவிக்காக மும்முனைப் போட்டி நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. போட்டிக்களமாக இந்த உள்ளக விடயத்தை மாற்றிவிடாமல் விட்டுக்கொடுப்புடன் ஏகமனதாக ஒரு தலைவரைத் தெரிவு செய்கின்ற பாரம்பரியத்தைப் பின்பற்றுமாறு இவ்விடயம் குறித்து எமது கட்சியின் மூத்த தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சம்பந்தன் அண்மையில் தெரிவித்திருந்தார்” என தமிழரசுக் கட்சியின் மட்டக்களப்பு மாவட்ட முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஞானமுத்து சிறிநேசன் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2





## இரண்டாம் வினாத்தாளுக்கு

# பெப். 1 அன்று விசேட பரீட்சை

கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாய விஞ்ஞானத்தின் இரண்டாம் வினாத்தாளை மீள் நடத்துவதற்கான விசேட பரீட்சையைப் பெப்ரவரி 01 திகதி காலை 8.30 மணிமுதல் 11.40 மணிவரை நடத்துவதற்கு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கடந்த 10ஆம் திகதி இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தால் இரத்து செய்யப்பட்ட விவசாய விஞ்ஞானத்தின் இரண்டாம் வினாத்தாளுக்குப் பதிலாக இந்த சிறப்புத் தேர்வு வாய்ப்பு நடைபெறுகிறது.

தொடர்ச்சி P2

# பால் மாவின் விலை உயர்வு

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை அடுத்த வாரம் முதல் அதிகரிக்கப்படும் என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, இறக்குமதி செய்யப்படும் 400 கிராம் பால் மா பொதியின் விலை 30 ரூபாவினால் அதிகரிக்கப்படவுள்ளதாகவும், இறக்குமதி செய்யப்படும் 1 கிலோ கிராம் பால் மா பொதியின் விலை 75 ரூபாவினால் அதிகரிக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.



## பரீட்சை வினாத்தாள் கசிவு

# CID விசாரணை





கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாயப்பாடத்தின் இரண்டாம் வினாத்தாள்கள் வெளியான சம்பவம் குறித்த விசாரணை குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## பொங்கல் திருநாள்:

# ஜனாதிபதி உள்ளிட்ட தலைவர்கள் வாழ்த்து

தைப்பொங்கலை கொண்டாடும் உலகவாழ் தமிழர்களுக்கு ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச உள்ளிட்ட அரசியல் தலைவர்கள் தங்களுடைய வாழ்த்துகளை தெரிவித்துள்ளர். தமிழ்மிரர் குடும்பமும் தங்களுடைய வாசகர்களுக்கு தைப்பொங்கல் வாழ்த்துகளை தெரிவித்துக்கொள்கிறது.

முழு வாழ்த்துச் செய்தி (பக்கம் 7)



# கையை கடிக்கிறது ‘கேரட்’

நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில், கேரட் ஒரு கிலோ கிராம் 1,000 ரூபாய் முதல் 1,100 ரூபாய் வரையிலும் விற்பனைச் செய்யப்பட்டதாக அந்த பொருளாதார மத்திய நிலையத்தின் தலைவர் அருண சாந்த ஹெட்டியாராச்சி தெரிவித்தார்.


அதேபோல், சீன உணவுக்கான பயன்படுத்தப்படும் புரோக்கோலி உள்ளிட்ட ஏனைய மரக்கறிகளின் விலை ஒரு கிலோ கிராம் 7,000 ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

தொடர்ச்சி P2



# மண்சரிவில் சிக்குண்ட வீடுகள்

படல்கும்புர பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வராதொலவத்த பிரதேசத்தில் சனிக்கிழமை (13) இடம்பெற்ற பாரிய மண்சரிவில் 12 வீடுகள் மண்சரிவுக்குள் சிக்கியுள்ளன.



தொடர்ச்சி P2

# செலவழித்த தொகையை மீளக் கோருகிறது ஜப்பான்



இலங்கை எல்.ஆர்.டி திட்டத்திற்கு ஏற்கனவே செலவிட்ட தொகையை, இரத்து செய்வதற்கு முன்னதாக வழங்குமாறு ஜப்பான் நிதி அமைச்சர் ஷுனிச்சி சுசுகி மற்றும் அவரது குழுவினர் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி எம்.பி.க்களிடம் தெரிவித்துள்ளதாக SJB பாராளுமன்ற உறுப்பினர் ஹர்ஷ டி சில்வா தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2

## 42,248 சந்தேக நபர்களின்

# பெயர்ப்பட்டியல் கையளிப்பு



நாடளாவிய ரீதியில் குற்றச்செயல்களுடன் தொடர்புடைய 42,248 சந்தேக நபர்களின் விரிவான பட்டியலை பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் அனைத்து பொலிஸ் நிலையங்களின் குற்றச் செயல்களுக்கு பொறுப்பான அதிகாரிகளிடம் கையளித்துள்ளார் என பொது பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த பட்டியலில் 35,505 பிடியாணை பிறப்பிக்கப்பட்டவர்களும்,

தொடர்ச்சி P2

# கலால் கட்டணம் அதிகரிப்பு

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க நிதி, பொருளாதாரம், ஸ்திரப்படுத்தல் மற்றும் தேசிய கொள்கை அமைச்சர் என்ற வகையில் கலால் உரிமக் கட்டணத்தை திருத்தியமைக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிட்டுள்ளார். இது தொடர்பான திருத்தங்கள் இம்மாதம் 12ஆம் திகதி முதல் அமுலுக்கு வரவுள்ளதுடன், பனை சாராயம் தவிர்ந்த ஏனைய மதுபானங்களுக்கான வருடாந்த 10 இலட்சம் ரூபாய் மதுபான ஆலை உரிமக் கட்டணம் இரண்டரை கோடி ரூபாவாக அதிகரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# கசினோ கட்டணங்கள் அதிகரிப்பு



2024 ஜனவரி முதலாம் திகதி, முதல் அமுலுக்கு வரும் வகையில், சூதாட்ட உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணங்களை அதிகரிக்கவுள்ளதாக நிதி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி, குறைந்தபட்சம் 250 மில்லியன் அமெரிக்க டொலர்களை முதலீடு செய்யும் விண்ணப்பதாரர்களுக்கு, கசினோ உரிமக் கட்டணம் மற்றும் புதுப்பித்தல் கட்டணம் தலா ரூ.10 பில்லியனாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

குறைந்தபட்சம் 500 மில்லியன் அமெரிக்க டொலர் முதலீடு செய்பவர்களுக்கு ரூ. 05 பில்லியன் உரிமக் கட்டணம் மற்றும் ரூ. 10 பில்லியன் புதுப்பித்தல் கட்டணமாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

## வாகன இறக்குமதிக்கான

# வர்த்தமானி வெளியீடு



அரசாங்கத்திற்கு அத்தியாவசியமான வாகனங்களை மட்டும் இறக்குமதி செய்யும் வகையில் புதிய வர்த்தமானி வெளியிடப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

பொதுவாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்படவில்லை என்றும், சில அரச நிறுவனங்களின் சில அத்தியாவசிய நடவடிக்கைகளுக்காக சில வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு மாத்திரமே இந்த வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டுள்ளதாகவும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

வெளிநாட்டு நிதியுதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் திட்டங்களுக்கான உதவியைப் பயன்படுத்தி வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் என்றும்,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

# “பிரித்தால் நல்லது”



இதற்காகப் பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் ஒருநாள் அவகாசத்தைக் கேட்டிருப்பதாக நான் அறிகின்றேன். அதன் பின்னர் ஒரு ஜனநாயக ரீதியாகப் போட்டியின் அடிப்படையில் யார் தலைவர் என்பதைத் தெரிந்து கொள்வதற்காக முடிவுகள் மேற்கொள்ளப்பட்டிருப்பதாக நான் அறிகின்றேன் என்றும் அவர் தெரிவித்திருந்தார்.

அவரது இல்லத்தில் ஞாயிற்றுக்கிழமை (14) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

“தற்போது பிரதேசக் கிளை உறுப்பினர்கள் வாக்களிப்பதனுடாக அதிகளவு வாக்குகளைப் பெறுகின்றவர்கள் தான் தமிழரசுக் கட்சியின் தலைவராக வரமுடியும் என முடிவு எட்டப்பட்டிருக்கின்றது.

எதிர்வரும் 21ஆம் திகதி அதற்கான முடிவு ஜனநாயக அடிப்படையில் எடுக்கப்படும் என் நான் நம்புகின்றேன்.

எனவே தமிழ்த் தேசியம் சார்ந்து எமது முடிவுகளை நாங்கள் எடுப்பது மிகவும் பொருத்தமாக அமையும் என நான் நினைக்கின்றேன்.

கட்சியின் தலைவர் பதவிக்காகத்தான் போட்டி நிலவுகின்றது மாறாக, செயலாளர் பதவிக்கான போட்டிகள், நிலவுவதாக எனக்குத் தெரியவில்லை. வடக்கிற்குத் தலைவர் பதவி கொடுத்தால் கிழக்கிற்கு செயலாளர் பதவி வழங்க வேண்டும் எனும் ஒரு தார்மீக சிந்தனை காணப்படுகின்றது.


எனவே கிழக்கிற்கு அந்த செயலாளர் பதவி கிடைக்கும் என நான் நினைக்கின்றேன். பொருத்தமானவர்களுக்கு அந்த பதவி வந்து சேருமாக இருந்தால் தமிழரசுக் கட்சியைச் சரியான திசையில் நகர்த்திக் கொண்டு செல்வதற்கு வசதியாக இருக்கும் என நான் நம்புகின்றேன் என அவர் மேலும் இதன்போது தெரிவித்தார்.




# பெப். 1 அன்று விசேட பரீட்சை

இதன்படி, இம்மாதம் 31ஆம் திகதியுடன் முடிவடையவிருந்த 2023(2024) உயர்தரப் பரீட்சைபெப்ரவரி 01ஆம் திகதி நிறைவடையும் எனவும் அன்றைய தினம் அனைத்துப் பரீட்சை நிலையங்களும் வழமை போன்று நடைபெறும் எனவும் பரீட்சை திணைக்களம் தெரிவித்துள்ளது.

# செலவழித்த தொகையை மீளக் கோருகிறது ஜப்பான்



ஜப்பானிய அமைச்சர் கடன் மறுசீரமைப்பை நிறைவு செய்ய விரும்பியதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் திட்டத்தை இலங்கை பாதிக்கக் கூடாது என்றும் அவர் கூறியிருந்தார்

# CID விசாரணை




ஜனவரி மாதம் 10ஆம் திகதியன்று இடம்பெற்ற கல்வி பொதுத் தராதர உயர்தரப் பரீட்சையின் விவசாயப் பாடத்தின் இரண்டாம் வினாத்தாளுக்கான பரீட்சை இரத்து செய்யப்பட்டுள்ளது. குறித்த வினாத்தாளின் கேள்விகள் மற்றொரு தாளில் கையாள் எழுதப்பட்டு சமூக ஊடகங்களில் வெளியானமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அமித் ஜயசுந்தரவினால் குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் முறைப்பாடு செய்யப்பட்ட நிலையில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.



# மண்சரிவில் சிக்குண்ட வீடுகள்

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வீடுகளே இவ்வாறு மண்சரிவுக்குள் சிக்கியுள்ளன எனவும் அந்த வீடுகளுக்கு அண்மித்துள்ள இன்னும் சில வீடுகளுக்கும் மண்சரிவு அபாயம் ஏற்படும் எனவும் மொனராகலை மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரதி பணிப்பாளர் ஏ.எச்.ரவீந்திர குமார தெரிவித்தார்.

குறித்த வீடுகளில் வசித்த 24 குடும்பங்களைச் சேர்ந்த சுமார் 100 பேர், வராதொல சிங்கள வித்தியாலயத்தில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்குத் தேவையான உலர்ந்த உணவுப் பொருட்கள், சுகாதார வசதிகளைப் பெற்றுக்கொடுத்த தேசிய கட்டிட பரிசோதனை அமைப்பு தெரிவித்துள்ளது.

கடந்த 12ஆம் திகதி சிறு நிலச்சரிவு ஏற்பட்டபோது, உயிர்ச் சேதம் ஏற்படாதவாறு குடியிருப்பாளர்கள் வெளியேற்றப்பட்டதோடு மறுநாள் காலை 12 வீட்டுத் தொழிலாளர்களின் வீடுகளும் பாரிய மண்சரிவினால் பாதிக்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# கலால் கட்டணம் அதிகரிப்பு

ரூ.250,000 ஆக இருந்த பனை சாராயம் காய்ச்சி உரிமக் கட்டணம் ரூ.50 இலட்சமாகவும், தவரணை போத்தல்களுக்கான உரிமக் கட்டணம் ரூ.10 இலட்சத்தில் இருந்து இரண்டரை கோடி ரூபாய் வரையிலும் அதிகரித்துள்ளது.

வினிகர் தொழிற்சாலைகளுக்கான உரிமக் கட்டணம் ரூ.5 இலட்சத்தில் இருந்து ரூ.25 இலட்சமாகவும், மதுபானங்களுக்கான ஆண்டு மொத்த விற்பனை உரிமக் கட்டணம் ரூ.10 இலட்சத்தில் இருந்து ரூ.50 இலட்சமாகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

# கையை கடிக்கிறது ‘கேரட்’



நுவரெலியா பொருளாதார மத்திய நிலையத்தில், கேரட் கிலோ கிராம் ஒன்று, விவசாயிகளிடமிருந்து சனிக்கிழமை (13) அன்று 900 ரூபாய்க்கு கொள்வனவு செய்யப்பட்டு 1,000 ரூபாய்க்கும் 1,100 ரூபாய்க்கும் இடையில் விற்பனைச் செய்யப்பட்டது என்றும் அவர் தெரிவித்தார்.

லீக்ஸ், பீட்ரூட், கோவா உள்ளிட்டவை ஒரு கிலோ கிராம் தலா, 450 ரூபாய்க்கும் 500 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் விற்பனைச் செய்யப்பட்டது. போஞ்சி மற்றும் மாலுமிரிஸ் ஒரு கிலோ கிராம்750 ரூபாய்க்கும் 800 ரூபாய்க்கும் இடையில் விற்பனைச் செய்யப்பட்டது.

பச்சை மிளகாய் 1,600 ரூபாய்க்கும் ராபு 350 ரூபாய்க்கும் விற்பனைச் செய்யப்பட்டன.

**“ கேரட் ஒரு கிலோ கிராம் 1,000 ரூபாய் முதல் 1,100 ரூபாய் வரையில் விற்பனை செய்யப்பட்டது**

இரண்டு வாரங்களுக்கு முன்னர் இதே சந்தையில் கேரட் கிலோ கிராம் ஒன்று 350 ரூபாய்க்கும் 400 ரூபாய்க்கும் இடைப்பட்ட விலையில் விற்பனைச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. புரோக்கோலி கிலோ கிராம் ஒன்று 750 ரூபாய்க்கு விற்பனைச் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# வர்த்தமானி வெளியீடு

அந்தத் திட்டங்களின் கீழ், கல்வி அமைச்சுக்கு இரண்டு பேருந்துகளும், சுகாதார அமைச்சுக்கு 21 டபுள் வண்டிகளும், சுகாதார அமைச்சுக்கு 3 பேருந்துகளும் கிடைக்கும். நடமாடும் மகப்பேறு கிளினிக்குகளுக்கான வாகனங்கள் மற்றும் தொழிலாளர் அமைச்சுக்கு ஒரு வாகனம் வழங்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்

மேலும், ஸ்ரீலங்கன் விமானச் சேவைக்கு 3 வாகனங்கள் இறக்குமதி செய்யப்படும் எனவும், ஸ்ரீலங்கன் விமானச் சேவையின் மூன்று வாகனங்கள் தவிர்ந்த ஏனைய அனைத்து வாகனங்களும் வெளிநாட்டுத் திட்டங்களை நடைமுறைப்படுத்தும் திட்டங்களுக்கு வெளிநாட்டு உதவி மூலம் வழங்கப்படும் எனவும் இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெயர்ப்பட்டியல் கையளிப்பு

கைரேகைகள் மூலம் அடையாளம் காணப்பட்ட 4,258 சந்தேக நபர்கள் மற்றும் கடந்த இரண்டு ஆண்டுகளில் நாட்டில் நடந்த குற்றங்களுக்காகத் தேடப்பட்டு வரும் 2,485 நபர்களும் உள்ளடங்குவதாக அவர்கள் மேலும் தெரிவித்தனர்.

நாளை (14) முதல் நடைபெறவுள்ள ‘யுக்திய’ நடவடிக்கையில் அனைத்து பொலிஸ் நிலையங்களின் பிரிவு அதிகாரிகள், மாவட்ட பொறுப்பாளர்கள், தலைமையக ஆய்வாளர்கள் (HQIs), மற்றும் குற்றப்பிரிவு OICகள் அனைவரையும் முனைப்புடன் பங்கேற்குமாறு IGP அறிவுறுத்தியுள்ளார்.

மேலும், அடுத்த மாதத்திற்குள் தேடப்படும் சந்தேக நபர்களைக் கைது செய்யும் நோக்கில் 24 மணி நேரமும் பொலிஸ் அதிகாரிகளை பணியில் அமர்த்துமாறு அனைத்து குற்றப்பிரிவு OIC களுக்கும் தேசபந்து உத்தரவு பிறப்பித்துள்ளார்.

போதைப்பொருள் மற்றும் பாதாள உலகத்துடன் தொடர்புடைய நபர்களை இலக்கு வைத்து மேற்கொள்ளப்பட்டு வரும் ‘யுக்திய’ நடவடிக்கைக்கு மேலதிகமாக, தீவு முழுவதும் குற்றச் செயல்களைக் குறைப்பதில் தீவிரமான முயற்சிகள் வலுவான தாக்கத்தை ஏற்படுத்தும் என்று அமைச்சு தெரிவித்துள்ளது.

**“ 24 மணி நேரமும் பொலிஸ் அதிகாரிகளை பணியில் அமர்த்துமாறு உத்தரவு**



# அழைப்பெடுத்தால் தண்டனை



பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சினால் ஸ்தாபிக்கப்பட்ட 118 தொலைபேசி இலக்கத்திற்குக் கிடைக்கக்கூடிய தகவல்கள் குறித்து மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இதன்மூலம், தேசியப் பாதுகாப்பிற்கு நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ அச்சுறுத்தல் ஏற்படுத்தக்கூடிய பயங்கரவாத மற்றும் தீவிரவாத செயற்பாடுகளையும் இந்த இலக்கத்திற்கு வழங்க முடியும் என தெரிவித்துள்ளார்.

இவை சார்ந்த முறைப்பாடுகள் தனிக் குழுவின் கீழ் கண்காணிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார். மேலும், பொய்யான தகவல்களை வழங்கும் நபர்களுக்கு எதிராகச் சட்டம் அமுல்படுத்தப்படும் எனவும் தெரிவித்தார்.

# பாராளுமன்ற சோறுக்கும் ஷொட் கொடுத்தது வற்

பெறுமதி சேர் வரி (வற்) அதிகரிக்கப்பட்டதை அடுத்து பாராளுமன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களின் சாப்பாட்டு கட்டணங்கள் இரண்டு மடங்குகளால் அதிகரிக்கப்பட்டுள்ளதாகப் பாராளுமன்ற தகவல்களக் தெரிவிக்கின்றன.

சாப்பாடுகளைத் தயார் செய்வதற்கான பொருட்களைக் கொள்வனவு செய்வதற்கான கட்டணங்கள் அதிகரித்தமையால், சமைப்பதில் பாரிய சவால்களைச் சமையல் காரர்கள் எதிர்கொண்டதாகவும் அந்த தகவல்கள் தெரிவிக்கின்றனர்.

பாராளுமன்றத்தில் சமையலுக்கு பெரும் செலவை அரசாங்கம் செய்கின்றது. எனினும், சமைத்து வழங்கும் உணவுகளுக்குப் பாராளுமன்ற உறுப்பினர்கள், பணியாளர்கள் மற்றும் விருந்தினர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணம் மிகவும் குறைவாகும் என்றும் அந்த தகவல்கள் தெரிவித்துள்ளது.

பாராளுமன்ற பணியாளர்களிடமிருந்து மாதமொன்றுக்கு 1000 ரூபாய் மட்டுமே அறவிடப்படுகின்றது என்பது வெளிச்சத்துக்கு வந்துள்ளது.

பொருளாதார நெருக்கடியைக் கவனத்தில் கொண்டு பாராளுமன்றத்தில் சாப்பாடு வேளையில் ஓரளவுக்குக் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. எனினும், செலவைக் கவனத்தில் எடுத்து இன்னும் கட்டுப்பாடு விதிக்கப்படவேண்டும் என்றும் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

பொருட்களின் விலைகளில் அவ்வப்போது அதிரடியான மாற்றங்கள் ஏற்பட்டுள்ளமையால், பாராளுமன்றத்தில் சமையலுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்யும் போது முறையான திட்டமொன்று அவசியமென அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

செலவு அதிகமாக இருப்பினும் சகலவற்றையும் முகாமைத்துவம் செய்து, உணவை விநியோகம் செய்வதற்குக் கடுமையான செயற்பாடாகும் என்றும் அந்த அதிகாரி தெரிவித்துள்ளார்.

## "மின்சாரம், நீர் கட்டணத்தை குறைக்கும்

# விலை சூத்திரம் விரைவில் அறிமுகப்படுத்தப்படும்"



■ மொஹொமட் ஆஸிக்

மின்சாரக் கட்டணக் குறைவுக்கு ஏற்ற வாரு நீர் கட்டணத்தையும் குறைக்கும் வகையில் மிக விரைவில் விலை சூத்திரம் அறிமுகப்படுத்தப்படும் என நீர் வழங்கல் மற்றும் தோட்ட உட்கட்டமைப்பு அபிவிருத்தி அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

பேராதனை பல்கலைக்கழக நீர் ஆராய்ச்சி மற்றும் தொழில்நுட்ப பிரிவில் இடம்பெற்றுள்ளது.

இதன்போது, பொதுமக்களுக்கு ஆரோக்கியமான மற்றும் சரியான குடிநீரை வழங்குதல், ஆராய்ச்சிகளை முறைப்படுத்துதல் மற்றும் கழிவு நீர் அகற்றலை முறைப்படுத்துதல் ஆகிய பிரச்சினைகள் குறித்து கலந்துரையாடியபோதே அமைச்சர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர், அடுத்த மாதம் மின்சாரக் கட்டணம் குறைக்கப்படும். அதேவேளை, நீர் கட்டணமும் குறைக்கப்படும்.

எரிசக்தி செலவைக் குறைப்பதன் மூலம் நீர் விநியோகச் செலவைக் குறைப்பதுடன், தண்ணீர் கட்டணத்தையும் குறைக்க முடியும்.

2019ஆம் ஆண்டு ஜனவரி மாதம் மின்சாரக் கட்டணம் 66% அதிகரித்தபோது, தண்ணீர்க் கட்டணமும் அதிகரிக்கப்பட வேண்டும்.

மேலும், இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வருவதாகவும், இலங்கை மீட்சி பாதையில் சென்று கொண்டிருக்கிறது.

உலக அளவில் மீண்டுவரும் பொருளாதாரத்தைக் கொண்ட நாடாக இலங்கை மாறி வருவதாகச் சுட்டிக்காட்டியுள்ளதுடன், சிலர் ஜனாதிபதி தேர்தலைக் கோருவதாகவும், சிலர் பொதுத் தேர்தலைக் கோருவதாகவும், கூறிய அவர் எந்த தேர்தல் நடந்தாலும் தேர்தலுக்கு ஏற்ற வகையில் இலங்கை தற்போது கட்டியெழுப்பப்பட்டு வருகின்றது.

அத்துடன், இலங்கை மீண்டுவரும் பொருளாதாரமாக மாறியுள்ளதாகவும், நீண்ட நேரம் மின்சாரம் துண்டிக்கப்பட்டு எரிவாயு மற்றும் எரிபொருளைப் பெற வரிசையில் நிற்கும் யுகம் முடிந்துவிட்டதாகவும் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

## உலக்கையால் தாக்கியதில் உலகை விட்டு பிரிந்தார்



பெண் ஒருவரின் வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து, பாலியல் வன்புணர்வுக்கு முயற்சித்த வேளையில், வீட்டிலிருந்த உலக்கையால் அப்பெண் தாக்கியதில் சந்தேகநபர் மரணமடைந்துள்ள சம்பவமொன்று அங்கொட-அளுத்கொட பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

சம்பவம் இடம்பெற்றபோது, அப்பெண்ணின் கணவரும் வீட்டில் இருந்துள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக தெரியவந்துள்ளது.

அளுத்கொட பிரதேசத்தைச் சேர்ந்த 31 வயதான நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தின்போது, தாக்கியதாகக் கூறப்படும் பெண் கைது செய்யப்பட்டுள்ளார் என தெரிவித்த அங்கொட பொலிஸார், மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்துள்ளனர்.

## பல்கலை மாணவன் நீரில் மூழ்கி மாயம்

■ எம் எஸ் எம் நூர்தீன்

ஒந்தாச்சிமட ஆற்றுப் பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்ட இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி காணாமல் போயுள்ளார்.

கிழக்கு பல்கலைக்கழக விஞ்ஞானப் பீடத்தில் இறுதியாண்டில் கல்வி பயிலும் 25 வயதுடைய இளைஞனும் அவரது தந்தையும் சனிக்கிழமை (13) காலை ஒந்தாச்சிமட ஆற்றில் மீன்பிடிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில், இளைஞனின் தந்தை நீரில் மூழ்கியுள்ளார்.

இதனையடுத்து, அவரை காப்பாற்ற முயன்றபோது, குறித்த இளைஞர் நீரில் இழுத்துச் செல்லப்பட்டதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மேலும், காணாமல்போன இளைஞரைத் தேடும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்

## உதவிச்செய்ய வந்து பணத்துடன் தப்ப முயன்றவர் கைது



தியத்தலாவையில் தன்னியக்க (ஏ.ரி.எம்) இயந்திரத்தில் பணத்தை பெறுவதற்கு உதவி செய்வதாகக் கூறி, பெண் ஒருவரின் அட்டையை (காட்) பெற்று, மற்றுமோர் அட்டையை கொடுத்து, சுமார் 2 இலட்சம் ரூபாயை பெற்றுக்கொண்டு தலைமறைவாக முயன்ற முன்னாள் இராணுவ வீரர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேநபர், மெதவாச்சியை வசிப்பிடமாகக் கொண்டவர் என்பதுடன் இராணுவத்தில் இருந்து விலகிச் சென்றவர் என்பதும் என தியத்தலாவை பொலிஸாரின் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

வங்கியின் தன்னியக்க இயந்திரத்தில் பணத்தை பெற்றுத்தருவதாகக் கூறி, அப்பெண்ணின் அட்டையில் இருந்து பணத்தை மீளப்பெற்று, அதனை கொடுக்காது. அப்பெண்ணிடம் மற்றுமோர் அட்டையை கொடுத்துவிட்டு, கொழும்பை நோக்கிச் சென்ற பஸ்ஸில் பணத்துடன் அந்த நபர் ஏறியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், தியத்தலாவை பொலிஸில் முறைப்பாடு செய்ததன் பின்னர் விரைந்து செயற்பட்ட பொலிஸார், அந்த பஸ்ஸை ஹல்துமுல்ல பிரதேசத்தில் வைத்து மடக்கிப்பிடித்து, சந்தேகநபரை கைது செய்துள்ளனர்.

## பொங்கல் பொதிகள் வழங்கி வைப்பு







■ நிதர்ஷன் வினோத்

தமிழர் திருநாள் தைப்பொங்கலை முன்னிட்டு இராவணன் ஆண்ட இலங்காபுரி மண்ணில் மேல்மருவத்தூர் சக்தி பீடத்தினால் பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு, யாழ்ப்பாணம், நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் கோவில் கலாசார மண்டபத்தில், இலங்கை மேல்மருவத்தூர் அருள்மிகு ஆதிபராசக்தி சித்தர் பீடம் கல்வி சமூகநலம் பண்பாடு அறப்பணிமையம் ஏற்பாட்டில் ஞாயிற்றுக்கிழமை (14) காலை இடப்பபெற்றது.

இதன்போது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட 100 மேற்பட்ட குடும்பங்களுக்கு இந்த பொங்கல் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டுள்ளது.







## 12 தமிழக மீனவர்கள் கைது

■ எம். றொசாந்த்

அத்துமீறி நுழைந்த 12 தமிழக மீனவர்கள் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசந்துறை கடற்படையினர் கடலில் சுற்றுக்காவல் (ரோந்து) நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தபோது, யாழ்ப்பாணம் - காரைநகர் கடற்பகுதிக்குள் அத்துமீறி கடற்தொழிலில் ஈடுபட்ட 12 தமிழக மீனவர்களை, சனிக்கிழமை (13) இரவு கடற்படையினர் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்டவர்களை கடற்தொழில் நீரியல் வளத்துறை அதிகாரிகள் ஊடாக ஊர்காவற்துறை நீதவான் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## வைத்திய பரிசோதனையும், ஆலோசனைகளும்

■ எச்.எம்.எம்.பர்ஸான்






மட்டக்களப்பு - கிரான் பகுதியில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ள பொதுமக்களின் நலன் கருதி, வைத்திய பரிசோதனையும் ஆலோசனைகளும் நடைபெற்றுள்ளன.

மட்டக்களப்பு மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் சுகுணனின் ஆலோசனையில், கிரான் சுகாதார வைத்திய அதிகாரி சிவலக்சன் தலைமையில், கிரான் மற்றும் சந்திவெளி பொதுச் சுகாதார பரிசோதகர் நௌஸாத்தின் வழிகாட்டலில், சுமார் 67 குடும்பங்களுக்குக் குடிநீர் பாதுகாப்பு, உணவு பாதுகாப்பு, சுகாதாரமான முறையில் கழிவகற்றல், தொற்றுநோய் கட்டுப்பாடு போன்ற விழிப்பூட்டல்கள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், முகாம்களில் தங்கியிருப்பவர்களுக்கு செங்கலடி வைத்தியசாலையின் பொறுப்பு வைத்திய அதிகாரி பரமானந்த ராஜாவினால் நோய்வாய்ப்பட்ட நோயாளர்களுக்கு மருத்துவ உதவிகள் வழங்கப்பட்டதுடன், வைத்திய அதிகாரி சிவலக்சன் நுளம்பு வலைகளையும் வழங்கி வைத்துள்ளார்.

## நிரந்தர பதிவாளர் நியமனம்

■ எம்.யூ.எம்.சனூன்



புத்தளம் மாவட்டத்திற்கான, புதிய பிறப்பு மற்றும் இறப்பு நிரந்தர பதிவாளராக புத்தளத்தை சேர்ந்த, பேர்னாட் மேரி இந்துமதி நியமனம் பெற்றுள்ளார்.

புத்தளம், மன்னார் வீதி. சோல்ட்டன், இரண்டாவது மைல் கல், ஒற்றைப்பனையடியில் வசித்து வரும் இவர் பல்கலைக்கழகப் பட்டதாரியாவார். சமாதான நீதவான் மற்றும் திருமணப் பதிவாளராகவும் இவர் கடமையாற்றி வருகின்றார்.

பதிவாளரைத் திங்கள் முதல் வெள்ளி வரை புத்தளம், தள வைத்தியசாலை அலுவலகத்திலும், சனி, ஞாயிறு தினங்களில், தனது இல்லத்திலுள்ள அலுவலகத்திலும் சந்திக்க முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## ஆடை மாற்றுவதை வீடியோ எடுத்த ஊழியர் கைது

■ ஷேன் செனவிரத்ன

கண்டி தேசிய வைத்தியசாலையின் சத்திர சிகிச்சை நிபுணர்கள் சத்திர சிகிச்சை அறைக்குச் செல்வதற்கு முன்னர் கிருமி நீக்கம் செய்யப்பட்ட ஆடை அறையில் கையடக்கத் தொலைபேசியை பொருத்தியதற்காக வைத்தியசாலை ஊழியர் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கண்டி தேசிய வைத்தியசாலையின் கண், காது, மூக்கு சத்திர சிகிச்சை அறையில், சத்திர சிகிச்சையில் பங்குகொள்ளும் பெண் வைத்தியர்கள் ஆடைகளை அணியும் அறையில் இரகசிய இடத்தில், வைத்தியசாலை ஊழியர் ஒருவர் தனது தொலைபேசியின் வீடியோ பதிவை இயக்கி மறைத்து வைத்துள்ளார். மேலும் பெண் மருத்துவர்கள் உடை மாற்றுவதை வீடியோவாக எடுத்து அதனைப் பார்த்துவிட்டு அழித்தமை பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

சம்பவத்தன்று சத்திர சிகிச்சையில் கலந்து கொள்வதற்காக மருத்துவர் ஒருவர், தனது உடைகளை மாற்றிக் கொண்டிருந்தபோது, உடை மாற்றும் அறையில் தொலைபேசி இருப்பதைக் கண்டு, அதனை சோதித்துள்ளார். அதில், தான் ஆடை மாற்றுவது வீடியோவாகப் பதிவாகியுள்ளது. அதை நீக்கிவிட்டு,

இது தொடர்பில் மருத்துவமனை நிர்வாகத்திடம் புகார் அளித்துள்ளார்.

அத்துடன், சந்தேகமடைந்த வைத்தியசாலைப் பணியாளரையும் கையடக்கத் தொலைபேசியையும் கண்டி தலைமையகப் பொலிஸாரிடம் ஒப்படைத்ததன் பின்னர், சில காலமாகப் பெண் வைத்தியர்கள் ஆடைகளை மாற்றும் காட்சிகளைக் கையடக்கத் தொலைபேசியில் வீடியோவாக எடுத்து அதனைப்பார்த்து அழித்ததாக பொலிஸாரிடம் கூறியுள்ளார்.

மேலும், பொலிஸார் அவரது தொலைபேசியை சோதனையிட்டபோது, அழகுக்கலை நிபுணர் ஒருவர் ஆடைகளை மாற்றியமை கையடக்கத் தொலைபேசியில் வீடியோவாக பதிவாகியிருந்ததை அவதானித்துள்ளனர்.

இது தொடர்பில் சந்தேகநபரிடம் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின்போது, வைத்தியர் அழகுக்கலை நிபுணராக இருந்தமையினால், வீடியோவை நீக்கவில்லை என பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

அதை வைத்து, சந்தேகநபர் கையடக்கத் தொலைபேசியின் வீடியோ பதிவை எவ்வாறு இயக்கி குறிப்பிட்ட இடத்தில் வைத்துள்ளார் என்பதும் குறித்து விசாரணையில் தெரியவந்துள்ளது. அத்துடன், வீடியோ நாடாக்களில் ஆடைகளை மாற்றும் வீடியோ காணப்படுவதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளார்.

சந்தேகநபர் சனிக்கிழமை (13) நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்படவுள்ளார்.

# தை பிறப்புடன் வ(லி)ழி பிறக்கிறதாம்

விவசாயிகள் சூரியனுக்கு நன்றி தெரிவித்து வருடாந்தம் கொண்டாடும் பாரம்பரிய பண்டிகையாகத் தைப்பொங்கல் திருநாள் அனுஷ்டிக்கப்படுகின்றது. அத்துடன், தமிழர்களின் தை மாதப் பிறப்பாகவும் இந்நாள் அமைந்திருப்பதுடன், சுப காரியங்களில் ஈடுபட ஆரம்பிக்கும் மாதமாகவும் அமைந்துள்ளது.

இம்முறை இலங்கையில் இந்த தைப் பிறப்புடன் கூடவே வலியும் பிறக்கவுள்ளதாக அறிந்து கொள்ள முடிகின்றது. நாட்டின் அரசாங்க வருமானத்தை அதிகரிக்கச் செய்யும் வகையில் பெறுமதி சேர்க்கப்பட்ட வரி 15 சதவீதத்திலிருந்து 18 சதவீதமாக அதிகரிக்கப்பட்டதுடன், பல புதிய பொருட்களும் இந்த வற் வரி உள்ளடக்கத்தில் உள்வாங்கப்பட்டுள்ளது. ஜனவரி 1ஆம் திகதி முதல் இந்த நடைமுறை அமுல்படுத்தப்பட்டுள்ள போதிலும், இதன் உண்மையான பாதிப்பு தை பிறப்பின் பின்னரே மக்களால் பெருமளவில் உணரக் கூடியதாக இருக்கும்.

காரணம், சந்தையில் இதுவரையில் காணப்பட்ட பொருட்கள் பெரும்பாலும் குறித்த வரி அதிகரிப்புக்கு முன்னதாக தயாரிக்கப்பட்டவையாகும். எனவே அவை தொடர்ந்தும் பழைய விலையில் விற்பனை செய்யப்பட்டிருந்தன.

ஆனாலும், பண்டிகையுடன், பொது மக்களின் நுகர்வு அதிகரித்திருப்பதால், அவை தீர்ந்துவிடவே, விலை அதிகரிப்புடனான தயாரிப்புகள் மீண்டும் சந்தையில் விற்பனைக்கு வரும்.

அரசாங்க ஊழியர்களுக்கு 5,000 ரூபாய் கொடுப்பனவு அதிகரிப்பு வழங்கப்பட்ட போதிலும், தனியார்த்துறையைச் சேர்ந்த பலருக்கு இந்த ஊதிய அதிகரிப்பு கிடைக்காது. பெருமளவானோர் தமது தொழிலைத் தக்க வைத்துக் கொள்வதே பெரும் சிரமத்துக்கு மத்தியிலாகும். இந்நிலையில், வரி அதிகரிப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளமையானது, மக்களின் நுகர்வு முறையில் மாற்றத்தைத் தோற்றுவிக்கும். அதாவது, முன்னர் மாதத்துக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தவர்கள், பின்னர் இரண்டு வாரங்களுக்குத் தேவையான பொருட்களைக் கொள்வனவு செய்தனர், இது பின்னர் 1 வாரமாகக் குறைந்தது. தற்போது வெறும் நான்கு நாட்களுக்கு போதுமான பொருட்களைக் கொள்வனவு செய்யும் நிலை தோன்றியுள்ளது.

தமது செலவுகளை இயன்றளவு குறைக்க முனையும் சூழலில், வியாபாரங்களும் அவ்வாறான நிர்ப்பந்தத்துக்கு ஆளாகியுள்ளன. மின் கட்டண அதிகரிப்பு, நீர் கட்டண அதிகரிப்பு போன்ற காரணிகளால் அவற்றின் உற்பத்திச் செலவுகள் அதிகரித்துள்ளன. இவற்றை ஈடு செய்ய மாற்று வழிகளைத் தேடுவதில் நிறுவனங்களின் நிர்வாகங்கள் கவனம் செலுத்துகின்றன. அந்த சூழலில், பொது மக்களின் நுகர்வும் குறைவதால், பல நிறுவனங்கள் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளன.

மத்திய வங்கியினால் நாணயக் கொள்கைகள் மற்றும் வட்டி வீதங்கள் தொடர்பான கொள்கைகள் தொடர்ந்தும் குறைப்புகள் அறிவிக்கப்பட்ட போதிலும், வங்கிகளில் அவற்றை அவதானிக்க முடியவில்லை. தற்போதும் 16 முதல் 18 சதவீதம் வரையான வட்டி அறவீடுகளையே வங்கிகள் மேற்கொள்கின்றன. இதனால், இலங்கையில் வியாபார செயற்பாடுகளை முன்னெடுத்துச் செல்வதற்கு உகந்த சூழல் இல்லை என்றே கூறமுடியும்.

வழமையாக, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கை இம்முறையும் பலர் மத்தியில் காணப்பட்டாலும், தை பிறப்புடன் கூடவே வலி தான் அதிகமாக அமைந்திருக்கும் என்பதைக் கள நிலைவரங்கள் காண்பிக்கின்றன.

தமிழ்Mirror க்கு எழுதுங்கள்
www.tamilmirror.lk




தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk






## வாழ்வியல் தரிசனம்

பகைவன் என நீங்கள் கருதுபவர்களிடம் இருக்கும் நல்ல குணங்களைத் தேடி அறிவீர்களாக! முழுமையாக நீங்கள் வாழுகின்றீர்களா என உங்களை நீங்களே கேட்பீர்களாக!

சில நிகழ்வுகள் எதிர்பாராத விதமாகச் சம்பவித்து விடுகின்றன. தப்பான அபிப்பிராயங்களால், நட்பு அடைபட்டு விடுகின்றது. சிலசமயங்களில் உங்களால் ஒதுக்கப்பட்டவர்கள் உங்களை நினைத்து வருந்தலாம்.

சில கர்வ எண்ணங்களால் உறவுகள் பாதிக்கப்படுகின்றன. வாழும் காலத்தில் நெஞ்சத்தில் கலவரம், வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புது ஒளியைப் பாய்ச்சும். தவறான எண்ணங்கள், கருத்துகள் உருவாதலாகாது.

வாழ்வின் அர்த்தம் யாவரையும் அரவணைத்துச் செல்வதிலேயே தங்கியுள்ளது. வெறுத்தலை விடுத்துச் சும்மா இருப்பது நல்லது. தொடரும் வெறுப்பை மறந்துவிடுக. அதுவே உங்கள் இதயத்தில் புதுஒளியைப் பாய்ச்சும்.

தகாத பொய்களைச் சொல்லி, எவரையும் பிரித்தலாகாது. சமூகம் இணைந்தால் பாரிய பலம் உண்டாகும். விலகி வாழ்ந்தால் எதையும் சாதிக்க முடியாது.

–பருத்தியூர் பால. வயிரவநாதன்

# தமிழர்களின் நிலைப்பாடு பயன்படா நிலைப்பாடுதானா?

லக்ஸ்மன்

தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் எதற்காகச் செயற்படுகின்றன. அவை தமிழர்களுக்காக சரியான அரசியலை இதுவரை காலமும் மேற்கொண்டிருந்தால் அவர்களின் சுயநிர்ணயப் போராட்டத்துக்கான வெற்றி ஏன் கிடைக்கவில்லை. யாரைத் திருப்திப்படுத்துவதற்காக இவை அரசியல் செய்கின்றன. இவ்வாறெல்லாம் பல்வேறு வினவல்களுக்கு இடையில்தான் இலங்கையின் பாராளுமன்றத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தொடர்பான விமர்சிப்பு நடைபெற்றிருக்கிறது.

கடந்த புதன்கிழமை நீதிமன்றம் சார் சட்டமூலங்கள் தொடர்பிலான விவாதத்தின்போது, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிதரன் முன்வைத்த கருத்துகளை மறுக்கும் வகையில் உரையாற்றிய நீதியமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ அவருடைய விமர்சிப்பை முன்வைத்திருக்கிறார். இந்த விவாதம் அல்லது விமர்சிப்பு தமிழர்களுக்கான அரசியலை ஓரளவுக்கேனும் சரியாக யாரும் செய்யவில்லை என்பதாகக் கூட முடிவைத் தரலாம்.

தமிழ் காங்கிரஸ், தமிழர் விடுதலைக் கூட்டணி, தமிழரசுக் கட்சி என மிதவாத அரசியலுடனும், ரெலோ, புளொட், ஈரோஸ், ஈ.பி.ஆர்.எல்.எவ், ஈ.என்.டி.எல்.எவ். என ஆயுத அரசியலுடனும் தொடர்ந்த தமிழர்களுடைய விடுதலைக்கான முயற்சிகள் பலனற்றுப் போனதாகவே இருக்கின்றன. அதன் பின்னர் உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பானது இப்போது இலங்கைத் தமிழரசுக்கட்சியின் பிரிதலுடன் குலைந்து போனதால் முயற்சி பலனற்றுப் போகும் நிலையையே ஏற்படுத்தியிருப்பதாகக் கூறமுடியும். ஆனால், அதனை ஏற்றுக் கொள்ள அக்கட்சிக்கு இயலுமையும் இல்லை. இந்த இடத்தில் உதவியில்லையேல் உபத்திரவம் இன்றியிருக்கும் மனோநிலை தேவை என்பதை நினைவிலிருத்தவும் அவர்கள் தயாரில்லை என்பது உண்மையாகவும் ஆகிவிடுகின்றது.

தந்தை செல்வா முன் நகர்த்திய அரசியல் தமிழ்த் தேசிய அரசியலின்பால் நாகரீகமான, சுதந்திரமான அரசியல் நலனுக்கான முயற்சிகளையே கொண்டிருந்ததாகக் கொண்டால், அதன் பின் நடந்த தமிழ் மக்களுக்கான அரசியல் பணி கழுதை தேய்ந்து கட்டெறும்பான கதையாகவே உள்ளதென்ற குற்றச்சாட்டையே கொண்டுவரும். வெறுமனே, சர்வதேச தொடர்புகளை ஏற்படுத்துவதும் மொழிப்புலமையை வைத்திருத்தலும் இதுவரை எதனைச் செய்துவிட்டது என்பதனைப் புரிந்து கொள்வதனைத் தவிர்த்து வரலாற்று ரீதியாகவும், பாரம்பரிய, பூர்வீகங்களைக் கொண்ட தமிழர்களுடைய அரசியல் சுதந்திரத்துக்காக தமிழ்த் தேசியத்தின்பாற்பட்டதாக எதனைச் செய்யமுடியும் என்பதனையே தமிழர் தரப்பு தீர்மானித்தாகவேண்டிய கட்டாயத்தினை இது ஏற்படுத்தும்.

அரசாங்கம் ஒரு பக்கம் நல்லிணக்க ஆணைக்குழுவை அமைக்கிறோம், அரசியலமைப்பை மாற்றுகிறோம் என்று சிலதைச் சொன்னாலும், வடக்கு, கிழக்கில் திட்டமிட்ட குடியேற்றங்கள் மூலமாகத் தமிழர்களின் விகிதாசாரத்தினைக் குறைக்கும் அதன் மூலமாக இனவழிப்பை நிகழ்த்த முனையும் சிங்களப் பேரினவாதத்தின் பலவேறு மோசமான முகத்தினை எவ்வாறு வெளிப்படுத்த நம்மால் முடியும் என்பது இன்னமும் தமிழர்கள் அறிந்து கொள்ளாத விடயமே.

தமிழர்களுடைய பூர்வீக உரிமை, அரசியல் அதிகாரங்களை இல்லாமல் செய்வதற்கான வேலைத் திட்டங்களையே காலாகாலமாக சிங்களம் செய்து வருகிறதென்றால் ஏன் அவை நிறுத்தப்படவில்லை என்பது இதுவரை புரிந்துகொள்ளப்படாததாகவே இருப்பதுடன், மக்களை ஏமாற்றும் தாமும் சேர்ந்து ஏமாறும் அரசியலைத் தமிழர் தரப்பு தொடர்வதனால் பயவிளையுமா?

வடக்கு, கிழக்கு தமிழர்களுடைய அரசியல் வரலாறென்பது கொள்ளை ரீதியாகவும், கோட்பாடு மற்றும் நிலைப்பாடு ரீதியாகவும் சீராகக் கட்டமைக்கப்பட்டது. அவ்வாறே இதுவரை காலமும் முன் நகர்த்தப்பட்டுமிருக்கிறது எனக் கொண்டால் அதனை வழிப்படுத்துவதற்கான அரசியல் சரியான முறையில் செய்யப்பட்டாக வேண்டும். இருந்தாலும், தமிழர்களுடைய உரிமைகளுக்கான அவர்களுடைய கோரிக்கைகளுக்கான அரசியலைத் தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் செய்கின்றனவா என்ற கேள்வி இந்த இடத்தில் எழுகிறது.

அவ்வாறில்லையானால், தமிழ்த் தேசிய அரசியல் கட்சிகள் தமிழர்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தின் வரன்முறைகளுடன் முன் நகர்த்தவேண்டியது காலத்தில் கட்டாயமாகும். தமிழ்த் தேசிய அரசியலானது தமிழர்களுடைய அரசியல் அபிலாஷைகளை நிறைவேற்றுவதற்காகவேயன்றி தனிப்பட்ட அரசியல்வாதிகளின் நலன் பேணுவதற்கானதாக இருக்கக்கூடாது என்பது முக்கியமானது.

அடிப்படையில் வரலாற்று ரீதியாகவும், பாரம்பரியமாகவும் வடக்கு, கிழக்கு மாகாண அலகானது மாகாணத்துக்குள் வாழும் அனைத்து இன, மத மக்கள் மத்தியிலும் சகவாழ்வு, இன, மத நல்லிணக்கம், ஒருமைப்பாடு, சகோதரத்துவம் நிலைபேறாக ஏற்பட்டாக வேண்டும்.

தமிழ் மக்களின் இன முரண்பாட்டுச் சிக்கல் வெறுமனே எழுந்தமானதாக உருவானதல்ல என்பதும், இதுவரை காலமும் நடைபெற்று வருகின்ற போராட்டங்கள் வேண்டாத, தேவையற்ற வேலை என்கிற பார்வையை அரசியல் பொதுவெளியில் ஏற்படுத்திவிடத்துடிக்கும், காலங்காலமாகச் செயற்படும் சிங்களப் பேரினவாத அரசியல்வாதிகள் தங்களை நல்லவர்களாகவும், வல்லவர்களாகவும் காண்பிக்க எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே விஜயதாச ராஜபக்ஷவின் கருத்துக்களைப் பார்க்க முடியும்.

மற்றுமொரு வகையில் பார்த்தால் பேரினவாதிகளுடன் கொள்கை ரீதியான பல விடயங்களில் உடன்பாடுகள், இணக்கப்பாடுகள் எட்டப்பட வேண்டும் என்ற கருத்துக்கள் தமிழர் தரப்பின் ஒரு பகுதியினரிடம் உருவாகி வருகின்ற சூழலில் இவ்வாறான கருத்து முன்வைக்கப்படுவதாகவும் நோக்கலாம்.

தமிழர்களுடைய உரிமைப் போராட்டத்தில் திம்புமுதல் ஏற்படுத்தப்பட்ட பல்வேறு ஒப்பந்தங்கள், பேச்சுவார்த்தைகளின் ஊடாக இதுவரையில் சீர்படுத்தப்படாத, உருவாக்கப்படாத தீர்வானது எதிர்வரும் காலங்களிலும் ஏற்படுமா என்ற சந்தேகம் இன்னமும் இருந்து கொண்டே இருக்கிறது. அதுவே வரலாறும் கூட. இது தொடர்ச்சியாகத் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டதன் ஊடாகவே நிரூபிக்கப்பட்டுமிருக்கிறது.

அதனால்தான், வடக்கு கிழக்கு மாகாணத்துக்கு ஐக்கிய இலங்கைக்குள் மீளப்பெறமுடியாத சமஷ்டி முறையிலான அதிகாரப் பகிர்வை வழங்குவதற்கு இந்தியா, அமெரிக்கா, பிரித்தானியா, கனடா, ஜேர்மன், அடங்கலான மையக்குழு நாடுகளும், ஐரோப்பிய ஒன்றியம், ஐ.நா.சபை போன்றனவும் இலங்கை அரசுக்கு அழுத்தம் கொடுக்க வேண்டும் என்ற கோரிக்கை வலுக்கத் தொடங்கியது.

நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் சட்டங்கள், திட்டங்கள் தமிழ் மக்களைத் திருப்திப்படுத்துவதற்கு மாறாக மேலும் துன்பங்களுக்குள் தள்ளுவதாகவே அமைந்திருப்பதற்குச் சிங்களப் பேரினவாதத்தின் சிந்தனையானது இலங்கை நாட்டு மக்கள் அனைவரினது ஜனநாயக வாழ்வு, இன நல்லிணக்கம், சகவாழ்வு, ஒருமைப்பாடு, சகோதரத்துவப் பண்புகளைச் சிதைப்பதற்கே காரணமாக அமைந்து விடுகின்றன.

இலங்கை சுதந்திரமடைந்தது முதல் தமிழ் மக்கள் எதிர்கொண்ட பாகுபாடுகள், இன்னல்கள், நெருக்கடிகள் அவர்களைத் தனித்து இருத்தலை நோக்கி நகர்த்தியிருக்கின்றன. முள்ளிவாக்காலில் யுத்தம் மௌனித்ததன் பின்னரும் அதனையே அவர்கள் கைக்கொண்டிருக்க வேண்டிய கட்டாயத்தினையே ஏற்படுத்தியிருக்கின்றன.

தமிழர்களுடைய சுயநிர்ணயப் போராட்டத்தில் ஆயுதப் போராட்ட அரசியலே உலகத்தினதும் சிங்கள தேசத்தினதும் கண்களைத் திறந்துவிட்டது. அதன் மூலம் சாதகமான நிலைப்பாடு உருவாவதற்குப் பதிலாகப் பாதகமான நிலைமையையே உருவாக்கியது என்பதனை மறுப்பதற்கில்லை. அதற்குத் தமிழர்களின் ஒற்றுமையின்மை, சரியான அரசியல் மயப்படுத்தலில்லாமையும், அதற்கான அறிவின்மையுமே காரணங்களாகக் கொள்ளப்படவேண்டும்.

தவிர்க்கமுடியாமல் மிதவாத அரசியலையே தமிழர்கள் கைக்கொண்டாகவேண்டிய திணிப்பு ஆதிக்க, அதிகார, மிலேச்சத்தனங்களால் உருவானது என்பதனை ஏற்றுக் கொள்வதற்குச் சிங்களவர்களும் தயாரில்லை என்பதே பாராளுமன்றத்திலும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது.

யுத்த காலத்தில் இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றப் பிரச்சினைகள், காணாமல் போனோரின் உறவினர்களின் போராட்டத்துக்குத் தீர்வு, வடக்கு கிழக்கின் காணி பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல், பௌத்த ஆதிக்கச் செயற்பாடு எனப் பல சிக்கல்கள் இருந்துகொண்டிருக்கையில் பாராளுமன்றத்தில் ஒரு நீதியமைச்சரால் எவ்வாறு இவ்வாறான கருத்துக்களை வெளியிடமுடிகிறது என்ற கவலைதான் தமிழர்களுக்கு ஏற்படவேண்டும்.

எதிரி நாடு ஒன்றின் மீது தொடுக்கப்படும் யுத்தத்துக்கு ஒப்பானதொன்றை நிகழ்த்தி முடித்து பெரும் இனவழிப்பினை செய்து விட்டும் கூட இவ்வாறு கருத்துரைக்க முடிகிறதென்றால், பேரினவாதத்தின் சிந்தனையும் அரசாங்கங்களின் சிந்தனையும் ஒன்றே என்பதே வெளிப்படுகிறது.

பௌத்த மதம் ஆட்சி செலுத்தும் இலங்கையில் பௌத்தம் இல்லாது, தேசியப் பாதுகாப்பென்பதும் ஒரே நாடு ஒரே சட்டம் என்பதும் எப்படிச் சாத்தியம் என்று மாத்திரமே இந்த இடத்தில் கேட்டுக் கொள்ளமுடியும். அது தமிழர்களின் போராட்டத்துக்கும், அழிவுக்கும், தொடரும் பொருளாதாரம் உள்ளிட்ட நெருக்கடிகளுக்கும் யார் காரணம் என்பதனை உணர மறுத்தலையே காட்டுகிறது. இருந்தாலும் தமிழர்களின் நிலைப்பாட்டை நாம் சந்தேகம் கொள்ளவும் வேண்டும்.

## கடிதங்கள்

### வடிகான்களை மூட நடவடிக்கை எடுக்கவும்

தலவாக்கலை நகரிலிருந்து நுவரெலியா வீதியில் மல்லியப்பு வரையான வீதியின் இரு புறமும் அமைந்துள்ள வடிகாலமைப்பின் கொங்ரீட் மூடிகள் சில இடங்களில் உடைந்து வடிகான்கள் திறந்த நிலையில் காணப்படுவதாக பொது மக்கள் தெரிவித்துள்ளனர்.

இரண்டு பாடசாலைகள், கால்நடை வைத்திய அலுவலகம், கூட்டுறவுச் சங்கம், சமுர்த்தி அலுவலகம், லங்கா சதொச நிறுவனம், பிரதேச செயலகம், பல அரச மற்றும் தனியார் வங்கிகள் உட்பட பல கடை தொகுதிகள் காணப்படுகின்றன.

இந்த வீதியின் இரு புறமும் உள்ள நடை பாதைகளை அதிகமானோர் தினந்தோறும் பயன்படுத்தி வருவதாக நகரவாசிகள் கூறியுள்ளனர்.

மேலும், இருபுறமும் காணப்படுகின்ற வடிகாலமைப்பின் ஊடாக கழிவு நீர் செல்கின்றது. வடிகாலமைப்பின் மேலே மூடப்படும் சில மூடிகள் உடைந்து காணப்படுகின்றமையால், அவ்வழியே பயணிக்கும் பொது மக்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் இதர தொழில்களுக்கு செல்வோர் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே, வடிகான்களை மூட சந்தப்பட்ட அதிகாரிகள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென தலவாக்கலை பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

– பி.கேதீஸ்



### குளோபல் பிசினஸ் அவுட்லுக்கினால்

# கொமர்ஷல் வங்கி கௌரவிப்பு

கொமர்ஷல் வங்கி 2023இல் இலங்கையில் ‘சிறந்த SME வங்கி’ மற்றும் ‘மிகவும்புத்தாக்க டிஜிட்டல் வங்கி’ எனத் தெரிவு செய்யப்பட்டிருந்தது.


வணிக உலகில் முக்கியமான நிகழ்வுகள் மற்றும் முன்னேற்றங்கள் குறித்த UK- ஐ தளமாகக் கொண்ட முன்னணி தகவல் வழங்குநரான குளோபல் பிசினஸ் அவுட்லுக் (GBO) மூலம் சமீபத்திய பாராட்டுகள் வங்கிக்கு வழங்கப்பட்டுள்ளன.

குளோபல் பிசினஸ் அவுட்லுக்கால் கொமர்ஷல் வங்கி கௌரவிக்கப்படுவது இது ஐந்தாவது சந்தர்ப்பமாகும்.

சிறந்த SME வங்கி விருது, SME களை அடையாளம் காணவும், மதிப்பீடுசெய்யவும், ஆதரிக்கவும் மற்றும் கண்காணிக்கவும் டிஜிட்டல் முயற்சிகள் உட்பட இலங்கையில் SME துறைக்கு கடன் வழங்குவதில் கொமர்ஷல் வங்கி அளித்துள்ள சிறப்பு முக்கியத்துவம் மற்றும் வங்கியின் அந்தஸ்து என்பவற்றோடு மிகப்பெரிய கடன் வழங்கல்களையும் அங்கீகரிக்கிறது.

வங்கியானது அதன் SME வாடிக்கையாளர்களுடன் தொடர்ந்து பல நிலைகளில் ஈடுபடுகிறது, அறிவு மற்றும் திறனை வளர்க்க உதவுகிறது மற்றும் உள்ளூர், சர்வதேச சந்தைகளுக்கு நெட்வொர்க்கிங் மற்றும் அணுகலை எளிதாக்குகிறது.

மிகவும் புதுமையான டிஜிட்டல் வங்கிக்கான விருது, அதன் பயன்பாடு மற்றும் அம்சங்கள், வங்கியின் பிரபலமான மொபைல் மற்றும் சமூக ஊடக வங்கி பயன்பாடுகள் மற்றும் டிஜிட்டல் கொடுப்பனவுகளில் அதன் தலைமை




மற்றும் வங்கியின் பங்கு ஆகியவற்றின் அடிப்படையில் அதன் டிஜிட்டல் வங்கி தளத்தின் மூலம் வங்கி அடைந்த டிஜிட்டல் தலைமையை அங்கீகரிக்கிறமை குறிப்பிடத்தக்கது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் மிகப் பெரிய தனியார் துறை வங்கி மற்றும் உலகின் சிறந்த 1,000 வங்கிகளில் பட்டியலிடப்பட்ட முதல் இலங்கை வங்கியாகும். கொமர்ஷல் வங்கி வலையமைப்பினைக் கொண்ட 271 கிளைகள் மற்றும் 964 தானியங்கி இயந்திரங்களை கொண்டு இயங்குகின்றது.

கொமர்ஷல் வங்கி இலங்கையின் சிறிய மற்றும் நடுத்தர வர்த்தகத் துறைக்கு பாரிய கடனுதவி வழங்குவதோடு நாட்டின் வங்கித் துறையில் டிஜிட்டல்புத்தாக்கங்களில் முன்னணியில் உள்ளது.

வங்கியின் வெளிநாட்டு செயற்பாடுகள் பங்களாதேஷை உள்ளடக்கியது, அங்கு வங்கி 20 கிளைகளை இயக்குகின்றது: மியன்மார் நய் பியி தாவில் நுண்நிதி நிறுவனத்தினை கொண்டுள்ளது.

### TAGS விருதுகள்

# 2023 இல் eChannelling க்கு கௌரவிப்பு

eChannelling PLC, அண்மையில் நடைபெற்ற TAGS விருதுகள் 2023 நிகழ்வில் சேவை பிரிவில்வெண்கல விருதை தனதாக்கியது.

TAGS (வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை) விருதுகள் நிகழ்வை, இலங்கை பட்டய கணக்காளர் நிறுவகம் (CA ஸ்ரீ லங்கா) ஏற்பாடு செய்திருந்ததுடன், முன்னர் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு நிதி அறிக்கை விருது என அறியப்பட்டது.

58 வருட கால வரலாற்றைக் கொண்டுள்ள இந்த விருது வழங்கும் வைபவம், நம்பிக்கை, பிரத்தியேகத்தன்மை மற்றும் முன்னேற்றம், நிலைபேறாண்மை மற்றும் நேர்த்தியான மாற்றம் ஆகியவற்றில் திரண்ட பொறுப்புணர்வு போன்றவற்றின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் அமைந்துள்ளது. கூட்டாண்மை அறிக்கையிடலில் சிறப்பாக செயலாற்றியிருந்த நிறுவனங்களை கௌரவிக்கும் வகையில் இந்த விருதுகள் வழங்கும் நிகழ்வு அமைந்துள்ளதுடன், வெளிப்படைத்தன்மை, பொறுப்புக்கூரல், ஆளுகை மற்றும் நிலைபேறாண்மை ஆகிய பிரிவுகளுக்கு முக்கியத்துவமளிக்கும் வகையில் அமைந்துள்ளது.

‘Pathways to Digital Lifestyles’ எனும் தலைப்பில் வெளியிடப்பட்டிருந்த 2022 ஆம் ஆண்டுக்கான நிதி அறிக்கைக்காக eChannelling விருதைப் பெற்றுக் கொண்டது. தொடர்பாடலில் ஆளுகை மற்றும் நிலைபேறாண்மையை வெளிப்படுத்துவதாக இந்த அறிக்கை அமைந்திருந்தது. சர்வதேச அறிக்கையிடல் செயற்பாட்டு நியமங்களை பின்பற்றியிருந்தமைக்காக இந்த வருடாந்த அறிக்கைஅறியப்பட்டிருந்ததுடன், டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு மற்றும் வாழ்க்கைமுறை சேவைகள் செயற்படுத்துநர் போன்றவற்றில் நிறுவனத்தின் நிலையை வெளிப்படுத்துவது போன்றவற்றை




உணர்த்துவதாக அமைந்திருந்தது. பொருளாதார சவால்களினால் பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்த போதிலும், தேசத்துக்காக சுகாதாரம் மற்றும் ஆரோக்கியத்தை பேணுவதற்கான eChannelling இன் அர்ப்பணிப்பு மற்றும் மீண்டெழுந்திறன் ஆகியவற்றை வெளிப்படுத்துவதாக இந்த அறிக்கை அமைந்திருந்தது.

மேலும், CA ஸ்ரீ லங்காவினால் நிர்ணயிக்கப்பட்ட நியமங்களை பூர்த்தி செய்திருந்தமையும், இந்த கௌரவிப்பை eChannelling பெற்றுக் கொள்வதற்கு ஏதுவாக அமைந்திருந்தது. பொறுப்புக்கூரல் மற்றும் வெளிப்படைத்தன்மை ஆகியவற்றை வெளிப்படுத்தியிருந்ததுடன், கூட்டாண்மை ஆளுகை கொள்கைகளை வெளிப்படுத்தி, துல்லியத்தன்மை மற்றும் தங்கியிருக்கும் திறன் ஆகியவற்றை அறிக்கையிடல் மற்றும் நிலைபேறான அறிக்கையிடலை முன்னுரிமைப்படுத்தல் போன்றவற்றையும் பின்பற்றுகின்றது.

பங்காளர்களுடன் வினைத்திறனான தொடர்புகளை பேணியிருந்தமைக்காகவும், உறுதியான நிதிசார் வினைத்திறனை கொண்டிருந்தமைக்காகவும் பாராட்டுதல்களை eChannelling பெற்றுக் கொண்டது.

துல்லியமான மதிப்பாய்வு செயன்முறைகளுடன், சில அடுக்கு மதிப்பீடுகளினூடாக, இந்த விருதின் மதிப்பு மேலும் உயர்த்தப்பட்டிருந்தது.

2020ஆம் ஆண்டில் வெள்ளி விருதை தனதாக்கியிருந்த eChannelling, 2018, 2019 மற்றும் 2021 ஆம் ஆண்டுகளில் தனது நிதி அறிக்கைக்கு வெண்கல விருதையும் சுவீகரித்திருந்தமை விசேட அம்சமாகும்.

வாழ்க்கையை மாற்றியமைப்பதில் இரு தசாப்த காலப்பகுதியை eChannelling PLC கொண்டாடும் நிலையில், சிறந்த எதிர்காலத்துக்கான அடித்தளத்தையும் கொண்டுள்ளது.

டிஜிட்டல் சுகாதார பராமரிப்பு மற்றும் வாழ்க்கை முறைகளில் குறிப்பிடத்தக்களவு மூலோபாய மாற்றங்களை ஏற்படுத்தி, உயர் சேவை வழங்கல்கள் மற்றும் நவீன தீர்வுகள் போன்றவற்றினூடாக, தேசத்தின் டிஜிட்டல் கட்டமைப்பை மாற்றியமைப்பதில் நிறுவனம் கவனம் செலுத்துகின்றது.



### ஊழலை எதிர்த்துப் போராடுவதில்

# CIABOC முன்வர வேண்டும்: TISL

இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டுகளை விசாரிப்பதற்கான ஆணைக்குழு (CIABOC), இப்போது ஊழல் எதிர்ப்புச் சட்டத்தின் (ACA) கீழ் அதிக அதிகாரங்களைக் கொண்டுள்ளது.

அண்மையில் நியமிக்கப்பட்ட மூன்று உறுப்பினர்களைக் கொண்ட ஆணைக்குழுவிற்கு நீதிபதி நீல் இத்தாவல தலைமை தாங்கியுள்ள நிலையில், முறையான ஊழலை எதிர்த்துப் போராடுவதற்கு வலுவான நடவடிக்கை எடுக்க வேண்டிய அவசியம் உள்ளது.

2022ஆம் ஆண்டு நடைபெற்ற பாரிய மக்கள் போராட்டம் (அரகலய) ஆழமாக வேரூன்றிய ஊழலும் ஆட்சிசார் பலவீனங்களும் இலங்கையில் முடங்கச் செய்யும் பொருளாதார நெருக்கடியை ஏற்படுத்தியுள்ளன என்பதைப் பொதுமக்கள் உணர்ந்ததை எடுத்துக்காட்டியது.

இந்தப் பிரச்சினைகளை நல்ல மனதுடன் தீர்ப்பதற்கான அரசின் விருப்பம் குறித்து பரவலான ஏமாற்றமும் விரக்தியும் நிலவுகிறது. சிவில் சமூகம் மற்றும் சர்வதேச நன்கொடை நிறுவனங்கள், குறிப்பாக சர்வதேச நாணய நிதியம் (IMF), ஊழல்

> **இலங்கையில் பரவலாகக் காணப்படும் ஊழல் பிரச்சினையின் அளவைக் கருத்தில்கொண்டு, ஊழலுக்கு எதிரான போராட்டத்திற்குத் தொலைநோக்கு, அச்சமற்ற தலைமைத்துவத்தை வழங்குமாறு புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் TISL வேண்டிக் கொள்கிறது. நாட்டின் மீட்புப் பாதையில் இந்தத் தீர்க்கமான தருணத்தில் CIABOC க்கு தேவையான நிதி மற்றும் செயல்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஆதரவை வழங்குமாறு TISL அரசாங்கத்திடம் கோருகிறது**

எதிர்ப்பு முயற்சிகளில் உண்மையான முன்னேற்றம் நாட்டின் பொருளாதார மீட்சிக்கு முக்கியமானது என்பதை வலியுறுத்துகின்றன. இலங்கைக்கான சர்வதேச நாணய நிதியத்தின் கட்டமைப்பு வரையறைகள், அதன் ஆட்சிசார் குறைநிறைகளைக் கண்டறியும் மதிப்பீட்டு அறிக்கை மற்றும் இலங்கையின் ஊழலுக்கு எதிரான தோற்றப்பாடு பற்றிய சிவில் சமூக பகுப்பாய்வு அறிக்கையின் பரிந்துரைகள் என்பன CIABOC ஐ வலுப்படுத்துவதன் முக்கியத்துவத்தை அடிக்கோடிட்டுக் காட்டுகின்றன.

CIABOC ஆனது, பெரிய ஊழல் வழக்குகளைக் குறிவைத்து, சிறிய குற்றச் செயல்களுக்கு அப்பால் சென்று பெரிய குற்றவாளிகளைத் தொடர்வதன் மூலம் பொதுமக்களின் நம்பிக்கையை மீளப் பெற வேண்டியதன் உடனடித் தேவையை ட்ரான்ஸ்பேரன்சி இன்டர்நெஷனல் ஸ்ரீலங்கா (TISL) வலியுறுத்துகிறது. குறிப்பாக, பெரிய அளவிலான ஊழல் சம்பவங்களில், பொறுப்புக்கூறலை நிறுவுவது, விசாரணைக்கு வருபவர்களையும், சாட்சிகளையும் அச்சமின்றி முன்வர ஊக்குவிக்கும்.

CIABOC ஆனது முன்னேற்றமடைய, அது சொத்து அறிவிப்புகளுக்கு பொதுமக்கள் அணுகலைத் துரிதப்படுத்த வேண்டும், முக்கிய ஊழல் வழக்குகளை முன்கூட்டியே விசாரிக்க வேண்டும், தனியார்த்துறை லஞ்சம் மற்றும் விளையாட்டு தொடர்பான ஊழலைக் கையாள்வதற்கான அதன் நோக்கத்தை விரிவுபடுத்த வேண்டும், மேலும் அதன் அர்ப்பணிப்புடன் கூடிய ஈடுபாடு மற்றும் முன்னேற்றத்தைப் பொதுமக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும்.

இலங்கையில் பரவலாகக் காணப்படும் ஊழல் பிரச்சினையின் அளவைக் கருத்தில்கொண்டு, ஊழலுக்கு எதிரான போராட்டத்திற்குத் தொலைநோக்கு, அச்சமற்ற தலைமைத்துவத்தை வழங்குமாறு புதிதாக அமைக்கப்பட்ட ஆணைக்குழுவிடம் TISL வேண்டிக் கொள்கிறது. நாட்டின் மீட்புப் பாதையில் இந்தத் தீர்க்கமான தருணத்தில் CIABOC க்கு தேவையான நிதி மற்றும் செயல்பாட்டுச் சுதந்திரம் மற்றும் ஆதரவை வழங்குமாறு TISL அரசாங்கத்திடம் கோருகிறது.

# IORA தினம் 2024

வெளிவிவகார அமைச்சு மற்றும் கல்வி அமைச்சு ஆகியன இணைந்து பாடசாலை மாணவர்களுக்காக IORA தினம் 2024 நிகழ்வை மார்ச் மாதம் ஏற்பாடு செய்துள்ளன. இதில், இந்து சமுத்திரத்தின் முக்கியத்துவத்தை உணர்த்தும் வகையில் மாணவர்களுக்கான ஓவியப் போட்டி உள்ளடங்கியிருக்கும்.

2023/2025 காலப்பகுதிக்கான, இந்து சமுத்திர ரிம் சம்மேளனத்தின் (IORA) தலைமைத்துவப் பொறுப்பை 2023 ஒக்டோபர் மாதம் இலங்கை ஏற்றிருந்தது. IORAஇல் 23 அங்கத்துவ நாடுகளும், பதினொரு கலந்துரையாடல் பங்காளர்களும் அடங்கியுள்ளன.

IORA தினத்துக்கான தொனிப்பொருள் 'எதிர்கால தலைமுறையினருக்கு நிலைபேறான இந்து சமுத்திரம்" என்பதாக அமைந்திருப்பதுடன், எதிர்காலத் தலைமுறையினருக்கு சமுத்திர பாதுகாப்பு மற்றும் நிலைபேறான செயன்முறைகள் போன்றவற்றின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வூட்டும் ஈடுபாட்டு செயற்பாடுகளில் அதிகளவு கவனம் செலுத்தும்.

திட்டமிடப்பட்ட செயற்பாடுகளில், கல்வி அமைச்சும் விஜய பத்திரிகை ஸ்தாபனமும் இணைந்து மாணவர்களுக்கான தேசிய மட்ட ஓவியப் போட்டியை நடத்துகிறது.

பாடசாலை மாணவர்களிடமிருந்து மூன்று பிரிவுகளில் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் – ஆரம்ப நிலை (தரம் 1 – 5), கனிஷ்ட நிலை (தரம் 6 – 9) மற்றும் சிரேஷ்ட நிலை (தரம் 10 – 13). விஜய பத்திரிகை ஸ்தாபனத்தின் சிறுவர் பிரசுரங்கள் மற்றும் ஒன்லைன் தளங்களில் மேலதிக தகவல்கள் வெளியாகும்.

சமுத்திர நிலைபேறாண்மையின் முக்கியத்துவம் தொடர்பில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில், நாடளாவிய ரீதியில் சிறுவர்களின் பங்கேற்புடன் பல்வேறு சமுத்திரம் சார்ந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். இலங்கை கடற்படை மற்றும் இதர சமுத்திரசார் முகவர் அமைப்புகளின் ஒழுங்கமைப்பில் இந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். மாணவர்களுக்கான குறுகிய காலப்பகுதி கடல் விஜயங்களுக்கான வாய்ப்புகளும் வழங்கப்படும்.

IORA தினத்துக்கு முன்னதாக பல்வேறு விழிப்புணர்வு நிகழ்ச்சிகளும் திட்டமிடப்பட்டுள்ளன.

IORA தினம் 2024இன் பிரதான நிகழ்வு கொழும்பில் கடல் முகப்புப் பகுதியில் மார்ச் 10ஆம் திகதி முன்னெடுக்கப்படும் என்பதுடன், சமுத்திரத்துடன் தொடர்புடைய செயற்பாடுகளை விளக்கும் காட்சிகூடங்களையும் கொண்டிருக்கும்.

# IORA தின ஓவியப்போட்டி 2024





## "எதிர்கால சந்தியிர்களுக்காக நிலையான இந்து சமுத்திரம்"

- இலங்கை, இந்து சமுத்திரத்தை அண்மித்த நாடுகளின்அ மைப்பான, IORA அமைப்பின் தலைமைத்துவத்தை தற்போது வகிப்பதுடன், 2024 ஆம் ஆண்டிற்கான IORA தினத்தை 2024 மார்ச் மாதம் 10ஆம் திகதி கொழும்பில் நடாத்துவதற்கு திட்டமிட்டுள்ளது.
- இது தொடர்பான நடவடிக்கைகளின் ஒருபகுதியாக, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிரகை என்பவற்றுடன் இணைந்து "எதிர்கால சந்ததியினர்களுக்காக நிலைபேறான இந்து சமுத்திரம்" என்ற தொனிப்பொருளின் கீழ் பல்வேறு தலைப்புகளில் பாடசாலை மாணவர்களிடையே நாடளாவிய ரீதியில் ஓவியப்போட்டி ஒன்றை நடாத்துவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

## நாடளாவிய ரீதியில் வளர்ந்து வரும் அனைத்து கலைஞர்களையும் அழைக்கிறோம் !

நமது அழகிய இந்து சமுத்திரத்தை பாதுகாப்பதை மையமாகக் கொண்டு தமது படைப்பாற்றலையும் ஆர்வத்தையும் வெளிப்படுத்துமாறு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலை மாணவ, மாணவியரை அன்புடன் அழைக்கிறோம்!





## பங்கேற்பு

பங்கேற்பதற்கான முறைகள் பின்வருமாறு வகைப்படுத்தப்பட்டுள்ளன:



**ஆரம்பபிரிவு (1–5 தரங்கள்)**
தலைப்பு : "எமது சமுத்திரம் - எமது வாழ்க்கை"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**கனிஷ்ட பிரிவு (6–9 தரங்கள்)**
தலைப்பு : "நமது சமுத்திரத்தை பாதுகாப்போம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**சிரேஷ்ட பிரிவு (10–13 தரங்கள்)**
தலைப்பு : "எதிர்கால சந்ததியினருக்காக நிலையான இந்து சமுத்திரம்"
(பங்கேற்பதற்கான சான்றிதழ்கள் / பரிசுகள் வழங்கப்படும்)



**வெற்றி பெறும் மற்றும் தேர்ந்தெடுக்கப்படும் கலைப்படைப்புக்கள் 2024 மார்ச் 10 திகதி கொழும்பில் நடாத்தப்படும் IORA கலைகண்காட்சியில் காட்சிப்படுத்தப்படும்.**



**அதிக பார்வையாளர்கள் மத்தியில் உங்களுடையத திறமைகளை வெளிப்படுத்தி உங்கள் செய்தியைப் பரப்புங்கள்.**



**உங்கள் கலைப்படைப்புக்கள் மூலம் நிலைப்பேறானத் தன்மைக்காக குரல் கொடுப்பவராகுங்கள், நேர்மையான மாற்றத்தை ஏற்படுத்துங்கள்**



## நிபந்தனைகள்

- இலங்கையிலுள்ள அனைத்து பாடசாலை மாணவர்களும் பங்குற்றலாம்
- A3 அளவான காகிதம் பயன்படுத்தப்பட வேண்டும்
- அனைத்து ஆக்கங்களும் பாடசாலை அதிபரால் சான்றளிக்கப்பட்டு கீழே தரப்பட்டுள்ள விண்ணப்பப் படிவமொன்றுடன் இணைத்து அனுப்பப்பட வேண்டும்.

## ஆக்கங்ளை ஒப்படைத்தல்

உங்கள் கலைப்படைப்புக்களை பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவத்துடன் 2024 பெப்ரவரி 16ஆம் திகதிக்கு முன்னதாக கிடைக்கக்கூடிய வகையில் கீழே உள்ள முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பிவைக்கவும்.

**பணிப்பாளர் (அழகியற்கல்வி) கல்வி அமைச்சு**

**இசுருபாய, பெலவத்தை பத்தரமுல்ல**

தபால் உறையின் இடது பக்கத்தில் மேல் மூலையில் பின்வரும் விபரங்களை குறிப்பிடவும்

**IORA தின ஓவியப்போட்டி 2024**
பிரிவு :.............................................
மாகாணம் :......................................

தெரிவு செய்யப்பட்ட கலைப்படைப்புகள் உள்நாட்டிலும் சர்வதேச ரீதியிலும் நடாத்தப்படும் எதிர்க்கால நிகழ்ச்சிகளுக்கும் பயன்படுத்தப்படும். வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, கல்வி அமைச்சு மற்றும் விஜய பத்திரிகை என்பவற்றால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## IORA தின ஓவியப் போட்டி 2024 விண்ணப்பப்படிவம்

**முழுப் பெயர்** :................................................................................................

**பிரிவு** : ஆரம்ப (1-5 தரங்கள்) ☐ கனிஷ்ட (6-9 தரங்கள்) ☐ சிரேஷ்ட (10-13 தரங்கள்) ☐

**பாடசாலை** :................................................................................................

**மாகாணம்** :................................................................................................

**வீட்டு முகவரி** :................................................................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் பெயர்** :..............................................................

**பெற்றோர் / பாதுகாவலரின் தொலைபேசி இலக்கம்** :.............................................

**அதிபரின் சான்றிதழ் :**

மேற்படி மாணவர் இந்த பாடசாலையில் ........................... தரத்தில் கல்வி பயின்று வருகிறார் என சான்றளிக்கிறேன்.

.................................................
அதிபரின் கையொப்பம்

# “விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்”

வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம் என ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க தனது பொங்கல் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உழவர் திருநாளான தைத் திருநாள், மகிழ்ச்சியையும் நன்றியையும் வெளிப்படுத்தும் வகையில், உலகெங்கிலும் உள்ள தமிழ்ச் சமூகத்தால் கொண்டாடப்படும் ஒரு செழிப்பான அறுவடைத் திருவிழாவாகும்.

வளமான அறுவடையையும், புதிய ஆரம்பத்துக்கான நம்பிக்கையையும் தைப் பொங்கல் திருநாள் குறிக்கிறது. தமிழ் நாட்காட்டியின்படி தை மாதத்தில் சூரியன் வடக்குக்கு நகரும்போது, நிகழும் மங்களகரமான அறுவடைக் காலத்தின் ஆரம்பமாக தைத்திருநாள் அமைந்துள்ளது.

இன்றைக்கு ஆயிரம் வருடங்களுக்கு முன்பாக சோழர்களின் ஆட்சிக்காலத்தில் வருடத்தின் முதலாவது அறுவடைக்காகத் தைப்பொங்கல் பண்டிகை கொண்டாட்டம் ஆரம்பிக்கப்பட்டதாக நம்பப்படுகிறது.

அறுவடையின் செழுமைக்கு வித்திட்ட இயற்கை, கால்நடைகள் உள்ளிட்ட அனைத்துக்கும் மனதார நன்றி கூறுவதே பண்டிகையின் நோக்கமாகும்.

இரண்டு வருடங்களாக விவசாயிகளின் அர்ப்பணிப்புக்களுக்கு மத்தியில் நாடு வெற்றிப் பாதைக்குள் பிரவேசிக்கும் வேளையில் தைப்பொங்கல் பண்டிகை இம்முறை கொண்டாடப்படுகிறது.

வீழ்ச்சி கண்டிருக்கும் இலங்கையின் பொருளாதாரத்தை மீளக் கட்டியெழுப்புவதில் விவசாயத்தின் மீது பாரிய நம்பிக்கை கொண்டுள்ளோம்.

விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் நாடளாவிய ரீதியில் விவசாயத்தில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தத் தேவையான திட்டங்களை அரசாங்கம் தற்போது செயற்படுத்த ஆரம்பித்துள்ளது. அந்த அனைத்து பணிகளும் வெற்றியளிக்க இம்முறை தைப்பொங்கல் தினத்தில் இயற்கையின் ஆசீர்வாதம் கிட்ட வேண்டுமெனப் பிரார்த்திக்கிறோம்.

அதேபோல் தைப்பொங்கல் நமக்கு சகவாழ்வையும் மதிப்பையும் போதிக்கிறது. அதற்கமைய நாட்டின் எதிர்காலத்துக்கான புதிய எதிர்பார்ப்புக்களைப் பூர்த்தி செய்வதற்கு ஒருதாய் மக்களாக முன்னேற்றம் அடைய வேண்டும் என அனைவரிடத்திலும் கேட்டுக்கொள்ளும் அதேநேரம், தமிழர்கள் அனைவருக்கும் சுபீட்சமும் மகிழ்ச்சியும் நிறைந்த தைப்பொங்கல் வாழ்த்துக்களைத் தெரிவிக்கிறேன் என செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.



# “சவால்களை எதிர்கொள்ள வேண்டும்”

இலங்கை வாழ் மற்றும் உலகெங்கிலும் உள்ள இந்து மக்கள் இயற்கைக்கு நன்றி செலுத்தும் முகமாகப் பக்தியுடனும் மரியாதையுடனும் கொண்டாடும் தைப்பொங்கல் திருநாள் தொடர்பில் வாழ்த்துச் செய்தியை தெரிவிப்பதையிட்டு மிகுந்த மகிழ்ச்சி அடைகின்றேன் என எதிர்க்கட்சித் தலைவர் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், மானுட வளர்ச்சியின் தொடக்கத்தில் இருந்து நாம் இயற்கையுடன் இணைந்த வாழ்க்கை முறையைக் கொண்டிருக்கிறோம். உலகிற்கு உயிர் கொடுக்கும் சூரிய பகவானை வழிபடுவது பண்டைய காலத்திலிருந்தே நடந்து வருகிறது. தைப்பொங்கல் பண்டிகை இந்த சூரிய பகவான் மீதுள்ள அபரிமிதமான நம்பிக்கை மற்றும் மரியாதைக்காக நடத்தப்படும் ஒரு சிறப்பு விழாவாக இந்த தைப்பொங்கல் திருவிழாவைச் சுட்டிக்காட்டலாம். தைப்பொங்கல் என்பது மனிதனுக்கும் இயற்கைக்கும் இடையிலான பரஸ்பர பிணைப்புக்கு நன்றி தெரிவிக்கும் ஒரு சிறந்த நிகழ்வாகும், மேலும் இந்து மக்களின் ஆன்மீக வாழ்க்கைக்கு நல்ல எண்ணங்களைச் சேர்க்கும் பண்டிகை என்றும் அழைக்கலாம்.

புதிய அறுவடையைச் சூரிய பகவானுக்குப் படைத்து அடுத்து வரும் ஆண்டில் நல்ல அதிர்ஷ்டத்தைக் கொண்டு வர வேண்டப்படுகின்றது. நம் நாட்டில் உருவாக்கப்பட்ட வங்குரோத்து நிலையால் ஏற்பட்ட சவால் மிக்க ஆண்டின் முடிவில் இன்னும் பல சவால்களுடன் இன்னுமொரு ஆண்டிற்குள் நுழைந்துள்ளோம். இனம், மதம், ஜாதி, குலம் என்ற வேறுபாடின்றி இந்த சவால்களை நாம் எதிர்கொள்ள வேண்டும். இதற்குத் தேவையான இயற்கையின் ஆசீர்வாதங்களை இந்தத் தைப்பொங்கல் தினத்தில் பெற்று உலகின் முதல்தர நாடாக மாறுவதற்கான புதிய பயணத்திலும் புதிய மாற்றத்திலும் இணைந்து கொள்ளுமாறு உலகெங்கிலும் உள்ள இலங்கையர்களை இத்தருணத்தில் கேட்டுக் கொள்ளுகின்றேன்.



# “புதிய மாற்றங்கள் ஏற்படும்”

பொங்கல் இலங்கை வாழ் மக்களின் வாழ்கையில் புதிய மாற்றங்களையும் எதிர்பார்ப்புகளையும் உருவாக்க வேண்டுமென ஜனாதிபதியின் கீழ் இயங்கும் தொழிற்சங்க முடிவுகளை எடுக்கும் மூவர் அடங்கிய குழுவின் உறுப்பினரும், ஐ.தே.கவின் இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளருமான சுப்பையா ஆனந்தகுமார் வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

மேலும், “பொங்கல் திருநாள் என்பது தமிழ்ப் பண்பாட்டின் அடையாளமாகும். உழவர்கள் திருநாளாகப் பொங்கல் உள்ளது. அதற்கு மறுநாள் கால்நடைகளைக் கௌரவிக்கிறோம். தமிழ் மக்கள் உயிர்நேயவாதிகள் என்பதையே உலகிற்கு இந்த பொங்கல் திருநாள் எடுத்துரைக்கிறது.

எமது வாழ்வியலிலும் உணவுத் தேவையிலும் பெரும் பகுதியை வழங்கும் கால்நடைகளைக் கௌரவிக்கும் ஒரு திருநாளாகவும் இது உள்ளது. அத்துடன், சமாதானத்தையும் உயிர் சமத்துவத்தையும் போதிக்கும் பொங்கல் நன்னாளில் நாமும் எமது வாழ்வில் மாற்றங்களை ஏற்படுத்திக்கொள்வோம்.

உலகமெங்கும் வாழுகின்ற தமிழர்கள் அனைவரும் அன்பு பொங்க, இன்பம் பொங்க, இனிமை பொங்க மகிழ்ச்சியுடன் கொண்டாடி மகிழும் தைத் திருநாளாம் பொங்கல் திருநாளில், எனதருமைத் தமிழ் மக்கள் அனைவருக்கும் உளமார்ந்த பொங்கல் திருநாள் நல்வாழ்த்துகளை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன்” என கூறியுள்ளார்.



# “மக்களின் நம்பிக்கை வெல்லட்டும்”

புது வாழ்வு பூக்கட்டும்.. எங்கும் மங்கல மகிழ்ச்சி பொங்கி புது வாழ்வு பூக்கும் என்ற எமது மக்களின் நம்பிக்கை பெருநாளாகத் தைப்பொங்கல் திருநாளை வரவேற்போம் என ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் செயலாளர் நாயகமும் கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்துள்ளார்.

மேலும்,

தைப்பொங்கல் திருநாள் எமது மக்களின் பண்பாட்டுப் பெருநாள். உழவர் திருநாள் என்றும், தமிழர் பெருநாள் என்றும் எமது மக்கள் தொன்று தொட்டுக் கொண்டாடி வரவேற்று வரும் தொன்மைத்திருநாள் இது, தை பிறந்தால் வழி பிறக்கும் என்ற நம்பிக்கையில் மாற்றம் ஒன்றை எதிர் பார்க்கும் எமது மக்கள் சூரியனுக்கு நன்றி செலுத்திப் பொங்கிப் படைத்து வருகிறார்கள். அது போல், எமது மக்கள் தம் வாழ்வில் இடர் சூழ்ந்த பொழுதுகளில் தம்முடன் கூடவே இருந்து துயர் தீர்த்தவர்களுக்கும், இலட்சியங்களை எட்ட முடிந்த, அழிவுகளற்ற யதார்த்த வழிமுறையில் தம்மை வழி நடத்தி செல்வோருக்கும், நன்றி செலுத்தும் பண்பாட்டையும் எமது மக்கள் இன்னமும் வளர்த்தெடுக்க வேண்டும்.

குறைவில்லாது உயிர்கள் வாழவும், மேன்மை மிகு நீதி விளங்கவும், பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் என்ற சமத்துவ நீதி நிலவவும், இல்லாமை எனும் இருள் நீங்கி எல்லோரும் எல்லாமும் பெற்று மகிழவும், நல்வழி காட்டும் நற்றார் மீதான நம்பிக்கையிலும் உறுதியாய் இருத்தல் வேண்டும்.

இலட்சியத்தில் தோற்றால், சூட்சுமத்தை மாற்றுங்கள், இலட்சியத்தை அல்ல என்ற உபதேசங்களை ஏற்று. தோற்றுப்போன வழிமுறைகளை கைவிட்டு, நாம் வகுத்து நடக்கும் நடை முறை யதார்த்த வழிமுறையில், சுபீட்சமான சுதந்திர வாழ்வை சகலரும் பூரணமாக அனுபவிக்கும் மகிழ் காலத்தை விரைவாக வென்றெடுப்போம். நாம் நீட்டியிருக்கும் தேசிய நல்லிணக்க கரங்களின் அழைப்பை ஏற்று எமது மக்களை நோக்கியும் பதில் கரம் நீட்டும் சாதகமான நிலைமைகள் கனிந்து வந்திருக்கின்றன.

சூழ்நிலைகளை சாதகமாக பயன் படுத்தி மாற்றங்களை உருவாக்குவோம். அறம் வெல்லும்,.. அநீதி தோற்கும்,...

எமது மக்களின் நம்பிக்கைகள் வெல்லட்டும்.....

இவ்வாறு தெரிவித்திருக்கும் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, மாற்றம் பிறக்கும் என்ற நம்பிக்கையோடு தைப்பொங்கல் திருநாளை கொண்டாடி மகிழும் சகல மக்களுக்கும் புது வாழ்வு பூக்கட்டும் என்றும் தெரிவித் துள்ளார்.



# “நல்லிணக்கம் ஏற்பட வேண்டும்”

உலகெங்கும் வாழும் தமிழர்கள் பண்டுதொட்டு கொண்டாடிவரும் தைப்பொங்கல் அனைவரின் வாழ்விலும் செழிப்பையும், வளங்களையும், மேன்மையையும் தரும் என்பது நம்பிக்கையாகும். அந்த வகையில் தமிழர்களின் பாரம்பரிய மிக்க தைத்திருநாளை முன்னிட்டு அனைவருக்கும் வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்துள்ளார்.

மேலும், “உழவுக்கும் தொழிலுக்கும் வந்தனை செய்வோம்” என்ற வாக்கிற்கு ஏற்ப இயற்கைக்கு நன்றி செத்தும் நாளாகவும் இத் திருநாள் கொண்டாடப்பட்டு வருகிறது.

விவசாயத்தைப் பிரதான தொழிலாகக் கொண்டமைந்த இயற்கை முறை வாழ்வியலே உலகின் வாழ்வாதாரமாகும். இயற்கையின் ஆதாரமே சூரியனாகும். விவசாயத்திற்குத் தேவையான அனைத்து விடயங்களுக்கும் ஆதாரமாக இருக்கும் சூரிய பகவானுக்கு நன்றி செலுத்துவதாகவும், உணவை வழங்கும் உழவர்களுக்கு நன்றி செலுத்துவதாகவும், அவர்களுக்கு உதவும் மாடுகளுக்கு நன்றி தெரிவிப்பதாகவும் என நன்றி செலுத்தும் ஒன்றாக தைத்திருநாள் அமைந்துவருகிறது.

உலகெங்கும் வாழும் தமிழர்கள் பண்டுதொட்டு கொண்டாடிவரும் தைப்பொங்கல் அனைவரின் வாழ்விலும் செழிப்பையும், வளங்களையும், மேன்மையையும் தரும் என்பது நம்பிக்கையாகும். இந்த நம்பிக்கையின் பயனாக ஒவ்வொருவரின் வாழ்வும் சிறப்புப் பெறும் பாரம்பரியம் மிக்கது தமிழர்களது பாரம்பரியம்.

பால் பொங்கி வழிவதைப் போல் அனைவரது உள்ளங்களிலும் அன்பும் மகிழ்ச்சியும் பெருகிப் பிரவாகிக்க வேண்டும் என்பது எமது விருப்பம்.

நல்லிணக்கம் ஏற்பட வேண்டும் என்ற எதிர்பார்ப்பு அனைவரிடமுமிருந்தாலும் அதற்கான விட்டுக்கொடுப்பு பரஸ்பர புரிந்துணர்வின்மை காரணமாக அமைதியும் ஒற்றுமையும் உருவாவதில் பிரச்சினைகள் ஏற்பட்டிருக்கின்றன. இந்த தைத்திருநாள் அதற்கான வாய்ப்பை உருவாக்கித்தர வேண்டும் என்று பிரார்த்திப்போம் என வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகிறேன் என குறிப்பிட்டுள்ளார்.



# “பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வு”

இயற்கையோடு இயைந்து இயற்கைக்கு உளப்பூர்வமாக நன்றி பாராட்டி- உழைப்பின் உன்னதத்தைப் போற்றுவது தமிழர் கொண்டாடும் தைப் பொங்கல் விழாவின் உன்னத நோக்கமாகும். அப்படிப்பட்ட புனித நாளில் தமிழர் வாழ்வில் நீண்டகாலமாகப் புரையோடிப்போயிருக்கும் பிரச்சினைக்கான நிரந்தர தீர்வானது இந்தவருடப் பொங்கலுடனாவது எட்டப்படவேண்டும் என காரைதீவு பிரதேசசபைத் தவிசாளர் கே.ஜெயசிறில் தனது பொங்கல் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சி இத்தரணியெங்கும் பொங்கவேண்டும். பொங்கல் என்பதற்குச் சாப்பிடும் பொங்கல் என்று பொருள் அல்ல. பொங்கிப் பெருகி வருவது என்று பொருள். தமிழர்கள்



இருக்குமிடமெல்லாம் பொங்கல் விசேஷமாகக் கொண்டாடப்படுகிறது.

சூரியனை வழிபடுவதால் உலகில் அடைய முடியாதவையே கிடையாது. வேதம் கதிரவனைப் பலவாறும் புகழ்கிறது. ‘நாஸ்திகர்களாலும் இல்லை என்று கூற முடியாத கடவுள் சூரிய பகவானே’ என்பதை வேதம் கூறுகிறது.

அப்படிப்பட்ட சூரியபகவானுக்கு நன்றி கூறுகின்ற இந்நாளில் சகலரது வாழ்விலும் நன்றியுணர்வு ஏற்படவேண்டும் என்றார்.

# “தீமைகளுக்கு முற்றுப்புள்ளி”

தைத் திருநாளாம் தைப்பொங்கலைக் கோலாகலமாகக் கொண்டாடும் அனைத்து இந்துப் பெரு மக்களுக்கும் உளம் நிறைந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்வதில் நான் பெரும் மகிழ்ச்சியடைகின்றேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தவிசாளரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள தைத் திருநாள் வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும், உழவர்களின் அறுவடைத் திருநாளாம் தைத்திருநாள் அன்று மகர சங்கராத்தியம் கொண்டாடப்படுகின்றது. சூரியனுடைய வடக்கிலிருந்து தெற்கு நோக்கிய பயணம்தான் மகர சங்கராத்தியம் என்று சொல்லுகின்றார்கள். எமக்கு மழையையும் வெயிலையும் கொடுத்து உதவுகின்ற சூரியனுக்கு சூரியப் பொங்கல் வைத்து நன்றி செலுத்துகின்ற ஒரு திருநாளாக இத்தைப் பொங்கல் அமைகின்றது. பொங்கல் பொங்கி வருகின்றபோது நாம் அனைவரும் சௌபாக்கியமாக வாழ்வதாக ஐதீகம் சொல்கின்றது. பொங்கல் பலவிதமானது. கோலிப் பண்டிகை, தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல், காணும் பொங்கல் என பல விதமான பொங்கல்களைக் கொண்டாடுகின்றோம்.

எனவே, தொழிலாளர்களின் வாழ்க்கையில் தீமைகளுக்கு முற்றுப்புள்ளி வைத்து ஒவ்வொருவரதும் ஆக்கப்பூர்வமான நடவடிக்கைகளையும் அழுத்தங்களையும் வெற்றிபெறச் செய்து எம்மில் பல நல்ல வகையான மாற்றங்களை ஏற்படுத்திக் கொடுக்கவும் மேலும் மக்களிடையே புரிந்துணர்வு, விட்டுக்கொடுப்பு போன்ற எண்ணங்கள் உருவாகி எமது மக்கள் சிறப்பாக வாழ்வதற்கு எல்லா வல்ல இறைவனைப் பிரார்த்திப்போம் என குறிப்பிட்டுள்ளார்.



# “புது பொலிவுடன் வழி பிறக்கட்டும்”

தமிழ் உறவுகளுக்கு நல்லிணக்கம் நிமிர்ந்திட எல்லா வளங்களும் பெருகிட என் இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள் பாராளுமன்ற உறுப்பினரும் ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகருமாக என வடிவேல் சுரேஷ் தெரிவித்துள்ளார்.

மேலும், உலகத்தில் மனிதக் குலத்தின் பசி போக்கிடும் உணவு தானியங்களை உற்பத்தி செய்யும் விவசாயிகள், இயற்கையின் அருட்கொடையான நிலத்துக்கும் பயிர் செழிக்கப் பயன்படும் உழவு மாடுகளுக்கும் நன்றி தெரிவிக்கின்ற விழாவாகத் தைப் பொங்கல் திருநாள். பண்டைக்காலம் முதல் தமிழர்கள் கொண்டாடும் தேசியத் திருவிழாவாகும்.

தை பிறந்தால் வழி பிறக்கும்’ என்பது ஆன்றோர் வாக்கு. அந்தவகையில், என் தொப்புள் கொடி உறவுகளான மலையக மக்கள் வாழ்விலும் புது பொலிவுடன் வழி பிறக்கட்டும் என்ற பிரார்த்தனையோடு

தைத்திங்கள் முதல்நாள் தன்னிகரற்ற பண்பாட்டுத் திருநாளாம் பொங்கல் நன்னாளுடன் தமிழ்ப் புத்தாண்டுத் திருநாளையும் இணைத்துக் கொண்டாடி மகிழும் தமிழ் உறவுகளுக்கு நல்லிணக்கம் நிமிர்ந்திட எல்லா வளங்களும் பெருகிட என் இதயம் கனிந்த பொங்கல் நல்வாழ்த்துக்கள் என குறிப்பிட்டுள்ளார்.





# நன்றி பகரும் பொங்கல் பண்டிகை

வி.ரி.சகாதேவராஜா

பொங்கல் என்பது விவசாயத்துக்கு மிகவும் இன்றியமையாத சூரிய பகவானுக்கு நன்றி சொல்லும் விதமாக ஏற்படுத்தப்பட்டது. அதனால் அன்று வீட்டு வாயிலில் அல்லது பூஜை அறைகளில் சூரியனின் வடிவத்தைக் கோலமாக வரைவது நல்லது. சூரியனுக்குப் பொங்கல் நிவேதிக்கப்படும் என்பதாலும் கண்ணால் நம்மால் காணமுடிந்த கடவுள் சூரியன் என்பதாலும் வீட்டு வாயில்களில் சூரியனின் கண் பார்வையிலேயே பொங்கலிடும் வழக்கம். இன்றும்கூட கிராமப்புறங்களில் அவை அனுசரிக்கப்படுகின்றன. நகரத்தில் இருப்பவர்கள் பொங்கல் செய்து அதனைச் சூரியன் கண்ணில் படும் இடங்களான பால்கலி அல்லது மொட்டை மாடியில் கோலமிட்டு மற்ற பொருட்களையும் வைத்து சூரியனுக்குச் சர்க்கரைப் பொங்கலை நிவேதனம் செய்யலாம்.

வெறும் பொங்கல் மட்டுமே நிவேதனப் பொருள் அல்ல. ஒரு முறத்தில் பூசணிக்காய், அவரைக்காய், முருங்கைக்காய், கிழங்கு வகைகள், பனங்கிழங்கு, கரும்பு போன்ற பொருட்களையும் வைத்து நிவேதனம் செய்யவேண்டும். முறத்தில் வைத்த காய்கறிகளைக் கொண்டு அன்று சமையல் செய்யவேண்டும். அப்படிச் செய்தால் சூரியனின் அருளைப்பெற்று ஆண்டு மகிழுவதும் பலமும், நலமும் பெற்று நலமாக வாழலாம் என்பது ஐதிகம்.







தை மாதப்பிறப்பே பொங்கல் என்று சிறப்பிக்கப்படுகிறது. அன்று சூரியன் மிகச் சரியாக மகர ராசியில் பிரவேசிக்கும் நேரத்தை அனுசரித்துப் பொங்கல் பானை வைப்பது வழக்கம். பானையின் கழுத்தில் மஞ்சள் குலை, சிறிய கரும்பு துண்டு ஆகியவற்றைக் கட்டி பானையில் புதிய அரிசியைப் போட்டு சிறிது பாலும் ஊற்றிப் பொங்கலிட வேண்டும். பானையிலிருந்து பாலும், அரிசியும் கலந்த நீர் பொங்கி வழிவது மிகவும் நல்ல சகுனமாகவும், வளத்துக்கு அறிகுறியாகவும் கருதப்படுகிறது. எந்த திசையை நோக்கிப் பொங்கி வழிந்தது என்பதை வைத்து அந்த ஆண்டுக்கான பலனைச் சொல்பவர்களும் உண்டு. பொதுவாகக் கிழக்கு திசை நோக்கிப் பொங்கி வழிதல் மிகவும் சுபமாகக் கருதப்படுகிறது. அதனால்தான், பொங்கலன்று ஒருவரை ஒருவர் சந்திக்கும்போது பால் பொங்கியதா எனக் கேட்கும் வழக்கமும் உருவாயிற்று.

## போகிப் பொங்கல்

தை மாதப்பிறப்புக்கு முந்தைய நாளே போகி என்று அழைக்கப்படுகிறது. இந்திரனுக்குப் போகி என்று ஒரு பெயருண்டு. மழை, மேகம், காற்று போன்றவைகளுக்கு இந்திரனே தலைவன் என்பதால் முதல் நாள் இந்திரனுக்கு நன்றி சொல்லும் விழாவாகக் கொண்டாடப்படுகிறது. அன்றே வீட்டு வாசல்களில் அழகான மாக்கோலம் வரைந்து தேவர்கள் தலைவனுக்கு மரியாதை செய்வார்கள். அறுவடைக்காலம் என்பதால் அந்த ஆண்டும் நெல்லும், பருத்தியும், கடலையும் வீட்டை நிறைத்திருக்க வேண்டும் என்பதற்காகப் பழைய பொருட்களைக் களைந்து புதிய அறுவடைப் பொருட்களுக்கு இடம் கொடுப்பார்கள். நம் மனதில் உள்ள பழைய எண்ணங்களான பொறாமை, கோபம், பேராசை போன்றவற்றை நெருப்பிலிட்டுப் பொசுக்கி, புதிய மனிதர்களாக நாம் மாறவேண்டும் என்பதே இதன் தத்துவம். இதனை உணர்த்தும் வகையில் பழைய பொருட்களை தீயிலிட்டுக் கொளுத்தி அதனைச் சுற்றி சிறுவர், சிறுமியர் ஆடிப்பாடி மகிழ்வார்கள்.

வீட்டைச் சுத்தப்படுத்துவது, வீட்டுக்கு வெள்ளை அடிப்பதும் போன்றவற்றைப் போகியன்று செய்தால் மிகவும் நல்லது. மறுநாள் பொங்கலை வரவேற்கும் பொருட்டு வீட்டின் வாசலில் மாவிலைத் தோரணங்களால் அலங்கரிக்கலாம். மஞ்சள் அல்லது சந்தனத்தால் வீட்டு வாசற்படிகளில் பொட்டு வைத்து வழிபடலாம். அப்படிச் செய்வதால் மகாலட்சுமி அன்னை நம் வீட்டைத் தேடி வருவாள் என்பது ஐதிகம்.

## மாட்டுப் பொங்கல்

மாட்டுப் பொங்கலுக்குப் பின்னால் சுவையான புராணக் கதை ஒன்று இருக்கிறது. ஒருமுறை சிவபெருமான். தனது பூத கணத்தில் ஒருவனான பசவன் என்பவனை அழைத்து உலக மக்களிடம் வாரம் ஒருமுறை உணவு உண்ணவேண்டும். தினமும் எண்ணெய் தேய்த்து நீராட வேண்டும் என்று அறிவித்து வரச் சொன்னார். ஆனால், பசவனோ தினமும் உண்ணவேண்டும், வாரம் ஒருமுறை எண்ணெய் தேய்த்துக் கொள்ளவேண்டும் என்று சொல்லிவிட்டான். இதனால் கோபம் கொண்டு சிவபெருமான், பசவனுக்கு சாபம் கொடுத்து விட்டார். அது என்ன தெரியுமா? ‘உன்னால் மக்களுக்கு அதிக உணவின் அவசியம் ஏற்பட்டு விட்டது. ஆகையால் நீ எருதாகவும் உன் மனைவி பசுவாகவும், பிறந்து நிரந்தரமாகப் பூமியில் வசிப்பாய்! மக்களுக்கு உணவுப் பொருளை உற்பத்தி செய்ய நீ கடுமையாக உழைக்கவேண்டும்’ என்று சொல்லிவிட்டார்.

வருத்தத்தில் ஆழ்ந்தான் பசுவன். இறைவனைப் பிரிந்து வாழவேண்டுமே என்று அவன் மனம் வெம்பியது. அவனது நிலை கண்ட சிவபெருமான். மனம் இரங்கினார். ‘கவலை வேண்டாம் பசவா! ஆண்டுக்கொரு முறை மக்கள் உனக்கு நன்றி செலுத்துவார்கள். சுவையான உணவுப் பொருட்கள் அளித்து உன்னை அலங்கரித்து மரியாதை செலுத்துவார்கள். உன் மனைவியான பசுவிற்கு எப்போதும் பூஜைகள் செய்வார்கள். அப்படிச் செய்பவர்களுக்கு நான் எல்லா வளமும், வற்றாத செல்வமும் அளிப்பேன். அதோடு உமையன்னையும் நானும் உங்களை நாடி வந்து நலன் விசாரிப்போம்’ என்றார். அதனால் ஆறுதல் அடைந்த பசுவன் அப்போதே தன் மனைவியுடன் காளை மாடாகவும், பசுவாகவும் பூமியில் பிறந்தான். அவனுக்குச் சிவபெருமான் அளித்த வாக்கின்படியேதான் இன்றுவரை மாட்டுப் பொங்கல் கொண்டாடப்படுகிறது.


மாடு இல்லாதவர்கள் கோசாலைக்கோ மாடு வைத்திருப்பவர்கள் வீட்டுக்கோ சென்று பசுவிற்குப் பூஜை செய்தால் இறைவன் மனம் மகிழ்ந்து, நம் வாழ்வில் மங்களம் நிலைக்கச் செய்வார்.

## காணும் பொங்கல்

சகோதரர்களைப் போற்றும் பொங்கல் இது. இதையே காணும்பொங்கல் என்றும் அழைப்பார்கள். சகோதரிகள் தங்களுடன் பிறந்த சகோதரர்கள் நன்றாக வாழ வேண்டும் என்று கடவுளை வேண்டிக் கொண்டு செய்யும் பொங்கல் இது. மஞ்சள் இலையில் சிறு சிறு உருண்டைகளாக வைத்து வேண்டுவார்கள். ‘காக்காய்க்கும் குருவிக்கும் கனுப்பிடி வைத்தேன். காக்கைக் கூட்டம் கலையாமல் இருப்பது போல என் கூட்டமும் கலையாமல் இருக்கவேண்டும்’ என்று வேண்டிக் கொள்வார்கள். பிறகு அந்த உணவினை காக்கைகளும் மற்ற பறவைகளும் புசிக்கும்படி அழைப்பார்கள். மற்ற உயிரினங்களிடமும் அன்பு காட்டும் உயரிய நம் பாரம்பரியத்தை எடுத்துக் காட்டும் செயல் இது. அப்படிச் செய்தால் புகுந்த வீட்டுக்கும், பிறந்த வீட்டுக்கும் நல்லுறவு நீடிக்கும் என்றும், சகோதரர்களுக்கு நீண்ட ஆயுளும், அமைதியான வாழ்க்கையும் அமையும் என்பது நம்பிக்கை.

அன்று சகோதரிகள் தங்கள் உடன் பிறந்தவர்களை வீட்டுக்கு அழைத்துச் சிறப்பித்து அவர்களுக்குப் பிடித்த உணவு வகைகளைச் செய்து அன்போடு உபசரிக்க வேண்டும். அப்படி சகோதரிகள் வீட்டுக்குச் செல்லும் சகோதரர்கள் கனுப்பிடி என்றழைக்கப்படும். சீர் கொண்டு செல்ல வேண்டும். அப்படிச் செய்வதால் சகோதரியின் மாங்கல்யம் நிலைக்கும். உடன்பிறந்தவர்களிடையே நல்லுறவு நீடிக்கும் என்பது ஐதிகம். அன்று மற்ற உறவினர்கள் வீடுகளுக்குச் சென்று பார்ப்பதும் வழக்கத்தில் உள்ளது.

உறவினர்கள், உடன் பிறந்தவர்கள் என அனைவரோடும் ஒற்றுமையோடும் நல்லிணக்கத்தோடும் வாழவேண்டும் என்று வேண்டிக் கொள்வோம். இல்லத்தில் பொங்கல் பொங்கட்டும். மனதில் மகிழ்ச்சி தங்கட்டும்!



தாய்வான்

# புதிய ஜனாதிபதியாக லை சிங் டி


கிழக்கு ஆசியாவில் பசிபிக் கடலில் அமைந்துள்ள தீவு நாடு தாய்வான். சீனாவுக்கு அருகே அமைந்துள்ள இந்நாட்டை தனி நாடாக சீனா அங்கீகரிக்கவில்லை. மேலும், தாய்வான் தங்கள் நாட்டின் ஒரு பகுதி எனவும் சீனா கூறி வருகிறது.

இதற்கிடையே, தாய்வானில் 4 ஆண்டுக்கு ஒருமுறை ஜனாதிபதி தேர்தல் நடைபெறுவது வழக்கம்.

அந்தவகையில், ஜனாதிபதி தேர்தல் சனிக்கிழமை (13) நடைபெற்றது. அங்கு ஆட்சியில் உள்ள ஜனநாயக முற்போக்கு கட்சி சார்பில் லை சிங் டி (Lai Ching-te) ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கினார். அவரை எதிர்த்து சீனா ஆதரவுபெற்ற தேசியவாத கட்சியின் ஹவ் யொ-ஹி ஜனாதிபதி வேட்பாளராக களமிறங்கினார். தாய்வான் மக்கள் கட்சியின் கோ வென் ஜி வேட்பாளராக களமிறங்கினார்.

இந்நிலையில், தாய்வான் ஜனாதிபதி தேர்தலில் ஆளும் கட்சி வேட்பாளரான லை சிங் டி வெற்றி பெற்றுள்ளார் என தகவல் வெளியானது. அவர் 40 சதவீதத்துக்கும் அதிகமான வாக்குகளைப் பெற்றுள்ளார். விரைவில் அவர் ஜனாதிபதியாக பதவியேற்க உள்ளார்.

தாய்வான் ஜனாதிபதி தேர்தல் விறுவிறுப்பாக நடைபெற்ற நிலையில், சீன இராணுவம் பகிரங்க மிரட்டல் விடுத்தது குறிப்பிடத்தக்கது.



இஸ்ரேல்

## "வெற்றி பெறும் வரை போர் தொடரும்"

இஸ்ரேல்- ஹமாஸ் அமைப்புக்கும் இடையிலான போர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி தொடங்கியது. தற்போது போர் 100ஆவது நாளை எட்டியுள்ளது.


இந்நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நேதன்யாகு, தொலைக்காட்சி வாயிலாக மக்களிடம் உரையாற்றினார். அப்போது அவர், "எங்களை யாரும் தடுக்கமாட்டார்கள். வெற்றி பெறும் வரை போர் தொடரும். காசாவில் நடத்திய இராணுவ தாக்குதலில், பெரும்பாலான ஹமாஸ் படையினரை அகற்றிவிட்டோம். ஒரு சர்வதேச சட்டம் உள்ளது. அது ஒரு எளிய விடயத்தைச் சொல்கிறது.

வடக்கு காசாவில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் எந்த நேரத்திலும் தங்கள் வீடுகளுக்குத் திரும்பமுடியாது. எகிப்து- காசா எல்லையின் கீழ் சுரங்கப்பாதை உள்ளது. இது காசாவிற்கு ஒரு முக்கிய விநியோக பாதையாக உள்ளது. இந்தப் பாதையை மூடும் வரை நாங்கள் போரை நிறுத்தமாட்டோம்" என தெரிவித்துள்ளார்.



துருக்கி

## "செங்கடலை இரத்த கடலாக்க நினைக்கிறார்கள்"



செங்கடல் பகுதியை "இரத்த கடல்" (sea of blood) போல் மாற்றி விட முயல்வதாக துருக்கி ஜனாதிபதி ரிசெப் தாயிப் எர்டோகன் தெரிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி பலஸ்தீன ஹமாஸ் அமைப்பினர் தெற்கு இஸ்ரேலில் தாக்குதல் நடத்தி 2,500க்கும் மேற்பட்டவர்களை கொன்று, 250க்கும் மேற்பட்டவர்களை பணய கைதிகளாக பிடித்து சென்றனர்.

இந்த சம்பவத்திற்கு பழி வாங்கும் விதமாக இஸ்ரேல், ஹமாஸ் அமைப்பினரை எதிர்த்து அவர்கள் மறைந்திருக்கும் பலஸ்தீன காசா பகுதியில் தீவிரமாக தாக்குதல் நடத்தி வருகிறது.

இப்போரில் இஸ்ரேலுக்கு, அமெரிக்கா, இங்கிலாந்து ஆதரவு அளிக்கின்றன. அதேபோல், ஹமாஸ் அமைப்பினருக்கு ஈரான், ஏமன், கத்தார், ஜோர்டான் உள்ளிட்ட நாடுகள் ஆதரவு அளிக்கின்றன. கடந்த 2023 ஒக்டோபர் 19 திகதி, ஹமாஸ் அமைப்பினரை ஆதரித்தும், இஸ்ரேலை எதிர்த்தும், ஏமன் நாட்டின் ஹிஸ்புல்லா (Hezbollah) அமைப்பினர் செங்கடல் (Red Sea) பகுதியில் இஸ்ரேலுடன் தொடர்புடைய கப்பல்களை வான்வழியாகவும், கடல் வழியாகவும் தாக்க தொடங்கினர்.

அப்பகுதி வழியாக செல்லும் கப்பல்களுக்கு பாதுகாப்பு அளிக்க அமெரிக்கா, இங்கிலாந்து உள்ளிட்ட பல நாடுகள் தங்கள் போர்கப்பல்களை அங்கு நிலைநிறுத்தி உள்ளன.

இதனையடுத்து, ஹிஸ்புல்லா அமைப்பினரின் நடவடிக்கைகளை முறியடிக்கும் விதமாக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து, ஏமன் நாட்டின் பத்திற்கும் மேற்பட்ட இடங்களில் வான்வழி தொடர் தாக்குதலில் ஈடுபட்டு வருகின்றன.

ஹமாஸை பயங்கரவாத அமைப்பாக கருதாத துருக்கி, ஏமன் தாக்குதலுக்காக அமெரிக்கா மற்றும் இங்கிலாந்து நாடுகளுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், துருக்கி ஜனாதிபதி ரிசெப் தாயிப் எர்டோகன், "ஏமனுக்கும் அமெரிக்க-இங்கிலாந்து படைகளுக்கும் இருப்பது ஒரு சமநிலை இல்லாத போர்க்களம். அளவுக்கு அதிகமாக ஏமன் மீது அமெரிக்காவும், இங்கிலாந்தும் தாக்குதல் நடத்துகின்றன. செங்கடல் பகுதியை "இரத்த கடல்" (sea of blood) போல் மாற்றி விட முயல்கின்றன. ஆனால், தங்களை காத்து கொண்டு, தங்கள் முழு சக்தியையும் திரட்டி, இதற்கு ஹவுதி அமைப்பினர் தக்க பதிலடி அளிப்பார்கள்" என தெரிவித்துள்ளார்.

மத்திய பிரதேசம்

## "உடலுறவுக்கு மறுப்பதும் வன்கொடுமை"

மத்திய பிரதேசத்தில் ஒரு தம்பதிக்கு கடந்த 2006இல் திருமணம் நடைபெற்றது. கணவர் வெளிநாடு செல்லும் வரை மனைவி உடலுறவுக்கு ஒத்துழைக்கவில்லை. இதனால் தம்பதிகளுக்குள் கருத்து வேறுபாடுகள் அதிகரித்து வந்தன.

எனவே, கணவர் கீழமை நீதிமன்றத்தில் தனக்கு விவாகரத்து வேண்டும் என வழக்கு தொடர்ந்தார். விசாரணை நடத்திய கீழமை நீதிமன்றம் கணவருக்கு விவாகரத்து தர மறுத்தது. இதை எதிர்த்து மத்திய பிரதேச உயர் நீதிமன்றில் வழக்கு தொடர்ந்தார்.

இந்நிலையில், மனைவி உடலுறவுக்கு மறுப்பதும் வன்கொடுமையே என்பதால் கணவருக்கு விவாகரத்து வழங்க மத்திய பிரதேச உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது

இதுதொடர்பாக உயர் நீதிமன்ற நீதிபதிகள் கூறுகையில்,

"மகிழ்வான மற்றும் நிறைவான குடும்ப வாழ்க்கைக்கு அவசியமான பாலுறவை வேண்டுமென்றே தவிர்ப்பது குடும்ப அமைதியை குலைக்கும்.

கணவன் - மனைவி இருவரில் ஒருவர், வேண்டுமென்றே பாலுறவைத் தவிர்ப்பது மனரீதியிலான கொடுமைப்படுத்துவதில் சேரும் என கணவர் தரப்பில் கோரிய விவாகரத்தினை வழங்கி தீர்ப்பளித்துள்ளது" என தெரிவித்தனர்.

கர்நாடகா

## மருத்துவமனைக்கு வர மறுக்கும் கர்ப்பிணிகள்

கர்நாடக மாநிலம் பெங்களூருவில் இருந்து சுமார் 700 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது பீதார் மாவட்டத்தின் பகடல் கிராமம். சுமார் 20 ஆயிரம் மக்கள் தொகை கொண்ட இந்த கிராமத்தை சுற்றியுள்ள 20 கிராமங்கள் பயன்பெறும் வகையில், கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு முழு வசதியுடன் கூடிய பிரசவ அறையுடன் ஒரே மாடிகொண்ட அரசு ஆரம்ப மருத்துவமனை கட்டப்பட்டது. ஆனால், இதுவரை இந்த மருத்துவனையில் ஒரு குழந்தை கூட பிறக்கவில்லை.

இதற்கு காரணம் இம்மருத்துவமனை கட்டிடமானது கல்லறைக்கு அருகிலேயே கட்டப்பட்டுள்ளதாகும்.

கல்லறைக்கு அடுத்துள்ள கட்டிடத்தில் பிறக்கும் குழந்தைகள் இறுதியில் பேய்களாக சுற்றித்திரியும் என்ற மூடநம்பிக்கையால்



கிராம மக்கள் பிரசவங்களுக்கு இந்த மருத்துவமனையை விரும்புவதில்லை. மாறாக ஒரு கிலோ மீட்டர் தொலைவில் உள்ள முந்தைய மருத்துவமனை கட்டிடத்திற்குச் செல்கின்றனர்.

கல்லறைக்கு அருகில் உள்ள நிலம் அரசுக்கு சொந்தமானது என்பதால் மருத்துவமனை கட்டிடம் கட்ட மாவட்ட நிர்வாகம் இந்த இடத்தை தெரிவு செய்ததாக கூறப்படுகிறது.

அத்துடன், குறைந்த படுக்கைகள் கொண்ட மருத்துவமனையில் உள்ள பெரும்பாலான வார்டுகள் மற்றும் பிரிவுகள் கல்லறையை எதிர்நோக்கியே உள்ளமை குறிப்பிடத்தக்கது.



இரண்டாவது போட்டியில்

# பாகிஸ்தானை வீழ்த்திய நியூசிலாந்து

பாகிஸ்தானுக்கெதிரான ஐந்து போட்டிகள் கொண்ட இருபதுக்கு-20 சர்வதேசப் போட்டித் தொடரில், ஹமில்டனில் நேற்று நடைபெற்ற இரண்டாவது போட்டியில் நியூசிலாந்து வென்றது.

ஸ்கோர் விவரம்:

நாணயச் சுழற்சி: பாகிஸ்தான்

நியூசிலாந்து: 194/8 (20 ஓவ. ) (துடுப்பாட்டம்: பின் அலென் 74 (41), கேன் வில்லியம்சன் 26 (15), மிற்செல் சான்ட்னெர் 25 (13) ஓட்டங்கள்)

பாகிஸ்தான்: 173/10 (19.3 ஓவ.) (துடுப்பாட்டம்: பாபர் அஸாம் 66 (43), பக்கர் ஸமன் 50 (25), ஷகீன் ஷா அஃப்ரிடி 22 (13) ஓட்டங்கள். அடம் மில்ன் 4/33 [4], இஷ் சோதி 2/33 [4], டிம் செளதி 2/31 [3.3], பென் சியர்ஸ் 2/28 [4])

போட்டியின் நாயகன்: பின் அலென்

## றோமாவிலிருந்து வெளியேறும் டிபாலா?

இத்தாலிய சீரி ஏ கால்பந்தாட்டக் கழகமான றோமாவான முன்களவீரரான போலோ டிபாலாவைக் கைச்சாத்திட இங்கிலாந்து பிறீமியர் லீக் கழகமான நியூகாசில் யுனைட்டெட் எதிர்பார்ப்பதாகக் கூறப்படுகிறது.


சீரி ஏ கழகங்களுக்கு வெளியே 13 மில்லியன் யூரோக்களுக்குச் செல்ல அனுமதிக்கும் சரத்தை தனது ஒப்பந்தத்தில் 30 வயதான டிபாலா கொண்டிருக்கின்றபோதும், அச்சரத்தானது இன்றுடன் காலவதியாகின்றமை குறிப்பிடத்தக்கது.

றோமாவுடன் இன்னும் ஒன்றரையாண்டுகள் ஒப்பந்தத்தை டிபாலா கொண்டிருக்கிறார்.



## குய்மரேஸை இலக்கு வைக்கும் செல்சி, லிவர்பூல்?

இங்கிலாந்து பிறீமியர் லீக் கால்பந்தாட்டக் கழகமான நியூகாசில் யுனைட்டெட்டின் மத்தியகளவீரரான புரூனோ குய்மரேஸைக் கைச்சாத்திடுவதில் மற்றைய பிறீமியர்ர் லீக் கழகங்களான செல்சி, லிவர்பூல் ஆகியன ஆர்வமாயுள்ளதாகக் கூறப்படுகிறது.



பிரெஞ்சு லீக் 1 தொடர்:

## றெய்ம்ஸிடம் தோற்ற மொனாக்கோ

பிரெஞ்சு கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான லீக் 1 தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஸ்டேட் டி றெய்ம்ஸுடனான போட்டியில் 1-3 என்ற கோல் கணக்கில் மொனாக்கோ தோற்றது.

மொனாக்கோ சார்பாகப் பெறப்பட்ட கோலை விஸாம் பென் யெடர் பெற்றார். றெய்ம்ஸ் சார்பாக டெடி டெயுமா, றெடா காட்ரா, அஸோர் மடுசிவா ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர்.

லீக் 1 புள்ளிகள் பட்டியலில் 40 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் நடப்புச் சம்பியன்களான பரிஸ் ஸா ஜெர்மைன் காணப்படுகின்றது. 35 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் நீஸும், 33 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் மொனாக்கோவும், 31 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் பிரெஸ்டும் காணப்படுகின்றது.



ஜேர்மனிய புண்டெலிஸ்காத் தொடர்:

## தோற்ற ஆர்.பி லெய்ப்ஸிக்

ஜேர்மனிய கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான புண்டெலிஸ்கா தொடரில், தமது மைதானத்தில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற ஐன்ரச்ட் பிராங்பேர்ட்டுடனான போட்டியில் 0-1 என்ற கோல் கணக்கில் ஆர்.பி லெய்ப்ஸிக் தோற்றது.

பிராங்பேர்ட் சார்பாகப் பெறப்பட்ட கோலை அன்ஸ்கர் நெளஃப் பெற்றிருந்தார்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் திங்கட்கிழமை 15 , ஜனவரி 2024, இல. 08, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு, இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.